28800

ஸ்ரீ

# அறப்பளீசுர சதகம்

(சிறுவர்க்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுட்டிரட்டு)

[அரும்பதவுரையுடன்]

---

வேலூர் காலெஜ் தமிழ்ப்பண்டிதர்

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால்

வேலூர்

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

---

[காபிரைட் ரெஜிஸ்டர் செய்தது]

1912

[விலை அணா இரண்டு]

# முகவுரை

அரிய பெரிய நீதிகளையும் மற்றுஞ்சில விஷயங்களையும் சிறுவர்க்கு ஏற்ற எளிய நல்ல செய்யுள் நடையில் தெரிவிக்கும் சிறந்த நூலாகிய அறப்பளீசுர சதகம், பல சிறுபள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்டு வருதல் யாவரும் அறிந்ததே. இந்நூல் கற்பிக்கப்படுதல் மிகவும் நன்றே. ஆயின், இச்சிறந்த நீதிநூல் கற்பிக்கப்படும் முறையோ குறையுற்றிருக்கின்றது: அஃதாவது - இந்நூலுக்குத் தக்க உரையின்மையாலோ பிறகாரணங்களாலோ மாணாக்கர்கள் பொருளறியாமற் செய்யுள்களைப் பாடம்பண்ணும்படி கற்பிக்கப்படுதலேயாம்.

இக்குறையோடு, பிழையில்லாத நல்ல சுத்தப்பிரதிப்புஸ்தகம் தக்கவுரையுடன் கூடியது கிடைக்காமல், அச்சுக்கு ஏற்காத விகாரமான காகிதமும் பிழைகள்மலிந்த விரும்புதற்காகாத அச்சும் சிறவாத உரையும் உள்ள புஸ்தகம் கிடைத்தலால் ஆகுங் குற்றங் குறையுஞ்சேர, இந்நூற்படிப்பு எவ்வளவு தாழ்ந்தநிலையில் இருக்குமென்பது யாவரும் அறியக்கூடியதே.

இங்ஙனம் இந்நூற்கல்வி மிகவும் சீர்கேடு அடைந்துள்ள நிலையில், அறிஞர் சிலர், இவற்றையெல்லாம் ஆலோசித்து, குற்றங் குறைகள் அகன்றால் இந்நூற்கல்வி சிறக்குமென அறிந்து, நீதிநூற் படிப்பு முக்கியமாகப் பள்ளிக்கூடங்களில் இருக்கவேண்டுமென்றும், மற்றும், பெற்றோர்கள் தம்மக்கள் இந்நூலையும் வேறு சில நூல்களையும் படிக்கவேண்டுமென்று விரும்புதலின் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுதற்காகவும் இந்நூல் பாடபுத்தகமாக வேண்டுமென்றுங் கருதி, என்னை அபிமானித்து இந்நூலையும் மற்றுஞ்சில நூல்களையும் தக்க அரும்பதவுரையோடு நல்ல சுத்தப்பிரதியாக வெளியிட்டுத்தருதல் நலமென அன்புடன் உரைத்தமையின், இந்நூலை அவர்கள் கருத்திற்கேற்ப வெளியிடலானேன்.

# முகவுரை

அரிய பெரிய நீதிகளையும் மற்றுஞ்சில விஷயங்களையும் சிறுவர்க்கு ஏற்ற எளிய நல்ல செய்யுள் நடையில் தெரிவிக்கும் சிறந்த நூலாகிய அறப்பளீசுர சதகம், பல சிறுபள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்டு வருதல் யாவரும் அறிந்ததே. இந்நூல் கற்பிக்கப்படுதல் மிகவும் நன்றே. ஆயின், இச்சிறந்த நீதிநூல் கற்பிக்கப்படும் முறையோ குறையுற்றிருக்கின்றது: அஃதாவது - இந்நூலுக்குத் தக்க உரையின்மையாலோ பிறகாரணங்களாலோ மாணாக்கர்கள் பொருளறியாமற் செய்யுள்களைப் பாடம்பண்ணும்படி கற்பிக்கப்படுதலேயாம்.

இக்குறையோடு, பிழையில்லாத நல்ல சுத்தப்பதிப்புப்புஸ்தகம் தக்கஉரையுடன் கூடியது கிடைக்காமல், அச்சுக்கு ஏற்காத விகாரமான காகிதமும் பிழைகள்மலிந்த விரும்புதற்காகாத அச்சும் சிறவாத உரையும் உள்ள புஸ்தகம் கிடைத்தலால் ஆகுங் குற்றங் குறையுஞ்சேர, இந்நூற்படிப்பு எவ்வளவு தாழ்ந்தநிலையில் இருக்குமென்பது யாவரும் அறியக்கூடியதே.

இங்ஙனம் இந்நூற்கல்வி மிகவும் சீர்கேடு அடைந்துள்ள நிலையில், அறிஞர் சிலர், இவற்றையெல்லாம் ஆலோசித்து, குற்றங் குறைகள் அகன்றால் இந்நூற்கல்வி சிறக்குமென அறிந்து, நீதிநூற் படிப்பு முக்கியமாகப் பள்ளிக்கூடங்களில் இருக்கவேண்டுமென்றும், மற்றும், பெற்றோர்கள் தம்மக்கள் இந்நூலையும் வேறு சில நூல்களையும் படிக்கவேண்டுமென்று விரும்புதலின் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுதற்காகவும் இந்நூல் பாடபுத்தகமாக வேண்டுமென்றுங் கருதி, என்னை அபிமானித்து இந்நூலையும் மற்றுஞ்சில நூல்களையும் தக்க அரும்பதவுரையோடு நல்ல சுத்தப்பதிப்பாக வெளியிட்டுத்தருதல் நலமென அன்புடன் உரைத்தமையின், இந்நூலை அவர்கள் கருத்திற்கேற்ப வெளியிடலானேன்.

இப்புத்தகத்தில், சிறுவர் கற்றற்கு ஏற்காத சிருங்காரரஸ விஷயங்களும் மற்றுஞ்சில இடக்கர்களும் அடங்கிய பாடல்கள் விலக்கப்பட்டன.

செய்யுள்களுக்குப் பதவுரை கருத்துரை முதலியனவெல்லாம் விவரமாகச் சேர்த்தால் அதனால் படிப்பவர்க்கு நூல் மிக எளிதாயிருக்குமாயினும், அங்ஙனஞ்செய்தலில் கற்பவர்கள் யாதொரு தன் முயற்சியுமின்றி வெறுங் குருட்டுப்பாடமாக நெட்டுருச்செய்து அதனால் அறிவு நிரம்பப்பெறுரென்று அறிஞர் பலர் கருதுகின்றனராதலின், இன்றியமையாததும் சுருக்கமும் கூடியவரையில் தெளிவுமான அரும்பதவுரைமாத்திரம் எழுதிச் சேர்த்திடலானேன். கடினமான சிற்சில இடங்களிற் கருத்துரையும், சிற்சில இடங்களில் மேற்கோள்களும் காட்டப்பட்டுள்ளன.

இந்நூலிலுள்ள செய்யுட்கருத்துக்கள் மிகச்சிறந்தனவாதலின், பெரிய கலாசாலைகளிற் கற்கும் மாணாக்கர்களும் பிறருங்கூட இந்நூலைப் படித்தறிதல் தகும்.

கல்வித்துறையிலுள்ள அதிகாரிகளும் சிறு பள்ளிக்கூடங்களிலும் பெரிய கலாசாலைகளிலுமுள்ள உபாத்தியாயர்களும் தமிழ்ப் பண்டிதர்களும் இப்புத்தகத்தை அபிமானித்து எனக்கு ஊக்கந் தரும் உதவி புரிவார்களென எதிர்பார்க்கின்றேன்.

இந்நூற்பதிப்பு இன்னுஞ் சீர்திருந்துதற்காக உபாத்தியாயர்களும் மற்றும் அறிஞர்களும் தகுதியாக வெளியிடும் அபிப்பிராயங்களெல்லாம் வந்தனத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அடுத்தபதிப்பில் அத்தகைய சீர்திருத்தம் செய்யலாகும்.

வேலூர்
1912௵ ஜுலைமீ 26உ

பு. க. ஸ்ரீ.

கடவுள் துணை

# அறப்பளீசுர சதகம்

சதுரகிரியென்ற ஸ்தலத்தில் அறப்பளீசுரமென்ற ஆலயத்தில் எழுந்தருளியிருக்கிற சிவபிரானது திருநாமத்தைச் செய்யுள்தோறும் அமைத்துப் பாடப்பெற்ற நூறுசெய்யுள்கொண்ட பிரபந்தம். சதுரகிரி திருவனந்தபுரத்தருகிலுள்ள ஓர்மலை யென்பர்.

## நூலாசிரியர்

இந்நூல் செய்தவர் **அம்பலவாணக்கவிராயர்**. இவர், சோழநாட்டில் தில்லையாடியில் வேளாளர்குலத்தில் இப்பொழுதைக்கு இருநூறுவருடங்களுக்குமுன் தோன்றிப் பின்பு சீகாழியில் தங்கி அறுபத்தேழுபிராயம் வாழ்ந்து இராமநாடகம், அனுமார்பிள்ளைத் தமிழ், சீர்காழிப்புராணம் முதலிய நூல்களைச் செய்து பிரசித்தி பெற்ற சீகாழி அருணாசலக்கவிராயரது புத்திரர் மூவருள் மூத்தவரெனப்படுவர். ஆகவே, இவர் பிறந்த காலம் ஏறக்குறைய 160-வருஷங்களுக்குமுன் என்னலாம். இவர்புதல்வர்பெயர் சுப்பராயக் கவிராயரென்பர். இந்நூற் செய்யுள்களின் மகுடத்திலெல்லாம் " அருமைமதவேள் அனுதினமும் மனதில்நினைதரு " என்ற அடைமொழியைச் சிவபிரானுக்குக் கொடுத்துக் கூறியிருத்தலைக்கொண்டு இவர் மதவேளென்னும் மறுபெயருடைய ஒருபிரபுவினால் ஆதரிக்கப்பட்டவரென அறியப்படும். அந்தப்பிரபு வேளாளசாதியில் தோன்றினவனென்றும், கங்காகுலத்தவனென்றும், மோழைபூபதியென்னும் பிரபுவினது மகனென்றும், ஈகை அழகு அறிவு அதிகாரம் புகழ் முதலியவற்றிற் சிறந்தவனென்றும் இந்நூலால் விளங்கும்.

அறப்பள்ளியென்பது-வைப்புத்தலங்களாகிய சிவதலங்களில் ஒன்று; அது, கொல்லிமலையைச் சார்ந்துள்ளது; அறப்பளியென்றும் வழங்கும். அதற்குச் சதுரகிரியென்றும் பெயருண்டு. மேற்படி சதகத்தைச் செய்வித்தபிரபு கொல்லிமலையிலுள்ள தூண்டுணி நாட்டுத் தலைவராகிய கருமக்கவுண்டரென்றும், இவர்தாம் இச்சதகத்தில் மதவேளென்றுகூறப்படுகிறவரென்றும், மோழைக்கவுண்டரென்பவர் இவருடைய தந்தையாரென்றும் சிலர் கூறுவர்.

## காப்பு

**உம்பர்கோ னெம்பெருமா னோங்கறப்பளீசுரன்மேற்**
**பைம்பொருள்சேருஞ் சதகம் பாடவே—அம்புவியோர்**
**ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார்க் கின்பருளிக்**
**காக்குந் துதிக்கையுளான் காப்பு.**

காப்பு-காக்கின்ற கடவுள்விஷயமான துதி.

உம்பர் கோன் - தேவர்களுக்குத் தலைவன். ஓங்கு-உயர்ந்த. அறப்பளீசுரன்-சதுரகிரியிலுள்ள அறப்பளீசுரமென்னும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரான். பைம்பொருள்-சிறந்த பொருள். சதகம்-நூறுசெய்யுள்கொண்ட ஓர் பிரபந்தம். அம் புவியோர் ஆக்கும் துதிக்கை உளான்-அழகிய பூமியிலுள்ளவர்கள் செய்யும் தோத்திரங்களை யுடையவன்:பூமியிலுள்ளவரால் துதிக்கப்படுபவனென்க; துதிக்கை-துதித்தல். அன்பு உடையார்க்கு-தன்னிடம் பக்தியை யுடைய அடியார்களுக்கு. இன்பு அருளி-இன்பத்தைத் தந்தருளி. துதிக்கை உளான்-தும்பிக்கையுடைய விநாயகக்கடவுள்; இங்கு, துதிக்கை என்பது-யானையின் தும்பிக்கையை யுணர்த்தும்.

## நூல்

### உயர் பிறப்பு

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினுண் மிக்க
காட்சிபெறு நரசன்ம மாய்க்
கருதப் பிறத்தலரி ததினு முயர் சாதியிற்
கற்புவழி வருதலரிது
வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலது தனினு மரிது
வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்றலரிது
நெடியதன வானதல ரிததி னிரக்கமுள
நெஞ்சினனா தலரிது
நேசமுட னன்பதத் தன்பனாய் வருதலந்
நிலையினு மரிதாம்
அடியவர்க் கமுதமே மோழைப்பூபதிபெற்ற
வதிபனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

கடல் உலகில்-கடல்சூழ்ந்த நிலவுலகத்தில். எழு பிறப்புக்கள்-தேவர், மக்கள், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. காட்சி பெறு நரசன்மம்-அறிவையுடைய மனிதப்பிறப்பு. கருத-ஆலோசிக்குமிடத்து; அல்லது, நன்குமதிக்க என்றும் பொருளாகலாம். கற்பு வழி வருதல்-கற்புள்ள சந்ததியிற் பிறத்தல். வடிவ

மடன்-நல்வடிவத்துடன்; வடிவழகுடன். மாசு இல் வழி நிற்றல்-குற்றமில்லாத சன்மார்க்கத்தில் நிற்பது. நெடிய தனவான்-பெரிய ஐசுவரியமுள்ளவன். நீள் நிலத்து-பெரிய நிலவுலகத்தில். அடியவர்க்கு அமுதமே - தொண்டர்களுக்குத் தேவாமிருதம் போல் இனியவனே. மோழை பூபதி - மோழையென்னும் அரசன். அதிபன் - தலைவன். அனுதினமும்-நாடோறும். (1)

### நன்மக்கட் பேறு

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
　　தருமங்கள் செய்து வரலுந்
　தன்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
　　சாதக னெனப்படுதலும்
மங்குத லிலாத தன் றந்தைதாய் குருமொழி
　　மறுது வழிபாடு செயலும்
　வழிவழிவருந் தமது தேவதாபத்திபுரி
　　மார்க்கமுந் தீர்க்காயுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியு
　　மீகையுஞ் சன்மார்க்கமு
　மிவையெலா முடையவன் புதல்வனு மவனையே
　　யீன்றவன் புண்யவானும்
அங்கச விரோதியே சோதியே நீதிசே
　　ரரசனெம தருமை மதவே
　ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
　　ரறப்பளீசுர தேவனே.

நல் மக்கள் பேறு-நற்குணமுள்ள புத்திரரைப் பெறுதல். பெரியோர்கள் - குலத்து முன்னோர்கள். கன யோக சாதகன்-மேன்மையாகிய யோகங்கள்பொருந்திய ஜாதகத்தையுடையவன்; சுப திதி வார நக்ஷத்திர யோக கரணங்கள் கூடிய நன்முகூர்த்தத்திற் பிறந்தவன். மங்குதல்-கெடுதல். மறாது-மறுக்காமல். வழிபாடு செயல்-வழிபடுதல், வணங்கி உபசரித்தல், தொண்டுசெய்தல். வழிவழி வரும் தமது தேவதா பத்தி-தொன்றுதொட்டு முறையாகத் தமது குலத்தில் பூஜிக்கப்பட்டுவரும் தெய்வத்தினிடத்திற் கொள்ளும் பத்தி; குலதேவதையின்மீது கொள்ளும் பத்தி. வழிவழி வரும் தேவதை-வழிபடுகடவுள் என்க. புரி-செய்கிற. தீர்க்க ஆயுள்-நீண்ட ஆயுள். இங்கிதம்-இனிமை. ஈகை-கொடை. ஈன்றவன்-பெற்றவன். அங்கச விரோதி-மன்மதனுக்குப் பகைவனான சிவபிரான்; சிவபிரான் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்துவிட்டதனால் அவரை இங்ஙனம் கூறியதென்க. சோதியே - ஒளியுருவமுடையவனே. (2)

## சகோதர ரொருமை

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுகமெனக்
கொண்டு தாங்தேடுபொருள்வர்தேடு பொருளவர்கொ [ள்
கோதில்புகழ் தம்புகழெனத்
தேடுற்ற வவர்நிந்தை தந்நிந்தை தந்தவந்
தீதிலவர் தவமாமெனச்
சீவனொன் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச்
சீறரவ மணிவாய் தொறும்
கூடுற்ற விரையெடுத் தோருட லிறைத்திடுங்
கொள்கைபோற் பிரி வின்றியே

கூடிவாழ்பவர் தம்மையே சகோதரரெனக்
கூறுவதுவே தருமமாம்
ஆடிச் சிவந்த செந்தாமரைப் பாதனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

எய்து துயர் - வந்த துக்கம். கோது இல் - குற்றமற்ற. தேடு உற்ற-தேடுதல் பொருந்திய; தேடிய. நிந்தை - பழி. தீது இல்-குற்றமற்ற. ஐந்து தலை சீறு அரவம் - ஐந்து தலைகளையுடைய சீறுந் தன்மையுள்ள சர்ப்பம். அணி வாய்தொறும்-அழகிய வாய்கள் தோறும். கூடு உற்ற - சேர்ந்த. இரை எடுத்து - உணவெடுத்து. கொள்கை-தன்மை. ஐந்தலைநாகம் தன் ஐந்து வாயினாலும் இரையெடுப்பினும் அதனை ஒருடலிலேயே நிறைத்தல்போல, சகோதரர் பலராயினும் அவர்கள் தாம் தேடிய பொருள்களைத் தனித்தனியே பிரித்துவைத்துக்கொள்ளும் வித்தியாசமின்றி ஓரிடத்திற் சேர்த்துக்கொண்டு ஒற்றுமையோடு இனிதுவாழ்தல் வேண்டுமென்றபடி. ஆடி சிவந்த செம் தாமரை பாதன்-நடனஞ்செய்து சிவந்த செந்தாமரைமலர்போலுந் திருவடியையுடையவன்; சிவபிரான் தில்லையம்பலத்தில் நடனஞ்செய்பவராதலால், இங்ஙனங் கூறப்பட்டார். அண்ணல்-பெருந்தன்மையுடையவன். (3)

## சற்குரு வியல்பு

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விவரவிஞ்ஞான பூர்ண

வித்யா விசேஷ சற்குண சத்ய சம்பன்ன
வீரவைராக்ய முக்ய
சாதாரணப்பிரிய யோகமார்க் காதிக்ய
சமாதி நிஷ்டானுபவராய்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர
தருமமும் பர சமயமும்
நீதியி னுணர்ந்து தத்துவமார்க்கராய்ப் பிரம
நிலைகண்டு பாச மிலராய்
நித்தியானந்த சைதன்யரா யாசையறு
நெறியுளோர் சற்குரவராம்
ஆதாரமா யுயிர்க் குயிராகி யெவையுமா
மமலவெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

வேதாந்த சித்தாந்தம் நெறி-வேதாந்தமெனப்படும் உபநிஷத்துக்களில் முடிவாகத்தேறிய கொள்கையின் வழி. ஆசாரம் விவரம்-நல்லொழுக்கத்தின் விவரம். விஞ்ஞானபூர்ணம் - விசேஷமான அறிவின் நிறைவு. சற்குணம்-நற்குணம். சத்தியசம்பன்ன-சத்தியத்தோடுகூடிய. வீர வைராக்கியம்-உறுதியாகிய வைராக்கியம்; வைராக்கியம்-ஆசையின்மை. முக்கியம் - தலைமை. சாதாரணப்பிரியம்-சாதாரணமாய்த் தன்னையடைந்தவர்களுக்கு எளியவனாயிருக்கும் அன்புடைமை; அருள். யோகமார்க்க ஆதிக்கியம்-யோகநெறியில் மேன்மைபெற்றிருக்குந் தன்மை. சமாதி நிஷ்ட அநுபவர் ஆய்-சமாதிநிஷ்டையில் அநுபவமுள்ளவராய்; சமாதி-எட்டுயோகத்துள்

ஒன்று. சட்சமயம்-ஆறுமதங்கள். அவை-வைஷ்ணவம், சைவம், சாக்தம், ஸௌரம், காணபதம், கௌமாரம், என்பன; வேறுவிதமுங் கூறப்படும். பர மந்த்ரம் - மேன்மைபொருந்திய மந்திரம். தந்த்ரம்-அங்கந்யாஸம்முதலிய உறுப்பின் தொழில்கள். பரதந்திர-கடவுளுக்குப் பரதந்திரனுயிருக்கிற எனினுமாம். பரசமயம்-அந்நிய மதங்கள்; அவை - பௌத்தம், ஜைநம், பைரவம், காளாமுகம், உலோகாயதம், சூனியவாதம்: இவை புறச்சமயம் என்பர். தத்துவ மார்க்கர் - மெய்ந்நெறியைக் கடைப்பிடித்தவர். பிரமம்—கடவுள். பாசம்-சுற்றத்தொடர்பு, பந்தம். நித்ய ஆனந்த சைதந்யர்-அழிவில்லாமல் நித்தியமான ஆனந்தத்தை அநுபவிக்கும் அறிவுருவினர்; சைதந்யர் - அறிவே உருவமெடுத்துவந்தாற்போல் இருப்பவர். சற்குரவர்-நல்ல ஆசாரியர். அமலன்-குற்றமற்றவன். (4)

## நன்மாணாக்கரியல்பு

வைதாலு மோர்கொடுமை செய்தாலுமோ சீறி
    மாறு திகழ்ந்தாலுமோ
  மனது சற்றுகிலுங் கோணாது நாணாது
    மாதா பிதா வெனக்குப்
பொய்யாம னீயென்று கனிவொடுஞ் பணிவிடை
    புரிந்து பொருளுட லாவியும்
  புனித வுன்றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
    போற்றி மலரடியில் வீழ்ந்து
மெய்யாகவேபரவி யுபதேச மதுபெற
    விரும்புவோர் சற் சீடராம்

விளைவேர றும்படி யவர்க்கருள் செய்திடுவதே
மிக்க தேசிகரது கடன்
ஐயா புரம்பொடிபடச்செய்த செம்மலே
யண்ணலெமதருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

கொடுமை-கொடிய தண்டனை. மாறாது-(கோபம்) மாறாமல். நாணாது -(குருவுக்குப் பணிவிடைசெய்கிற விஷயத்தில்) நாண மடையாமலுமிருந்து. கனிவொடும்-நெஞ்சுருக்கத்துடனே. பணி விடை-குற்றேவல். புனித-பரிசுத்தனே! இது, மாணாக்கன் குருவை விளிக்கும் சொல். தத்தம் செய்து-கொடுத்து; ஒப்பித்து. போற்றி-துதித்து வழிபாடுசெய்து. மலர் அடியில் வீழ்ந்து - (குருவினது) தாமரைமலர்போன்ற சீர்பாதங்களிலே விழுந்து தண்டனிட்டு. பரவி-புகழ்ந்து. சற்சீடர் - சத் சீடர்; நல்ல மாணாக்கர். வினைவேர் அறும்படி-(மாணாக்கர்களுடைய) கருமங்கள் வேரோடு அழியும்படி. மிக்க தேசிகரது கடன்-(நற்குண நற்செய்கைகளிற்) சிறந்த நல் லாசிரியரது கடமையாம். புரம் பொடிபட செய்த-திரிபுரத்தைச் சாம்பலாம்படி எரித்திட்ட. செம்மலே-சிறந்த வீரனே! பரமசிவன் திரிபுரசங்காரஞ்செய்த வரலாற்றைக் கேட்டறிக. (5)

பொருள் செயல் வகை

புண்ணியவசத்தினாற் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்கவேண்டும்
புத்தியுட னதுவொன் றுநூறாகவேசெய்து
போதவும் வளர்க்கவேண்டும்

உண்ணவேண்டும் பின்பு நல்ல வஸ்த்ராபரண
முடலிற் றரிக்கவேண்டு
முற்ற பெரியோர் கவிஞர் தமராதுலர்க் குதவி
யோங்குபுகழ் தேடவேண்டும்
மண்ணில் வெகுதருமங்கள் செயவேண்டு முயர்மோக்ஷ
வழிதேடவேண்டு மன்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்க மறியாக் குருடராம்
அண்ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரு
மழக னெமதருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

புத்தியுடன்-அறிவினால். போதவும்-மிகவும். உற்ற-(சிறப்புப்) பொருந்திய, அல்லது வந்தடைந்த. தமர்-உறவினர். ஆதுலர்-தரித்திரர். ஓங்கு புகழ்-உயர்ந்த கீர்த்தி. வறிதின்-வீணாக. (6)

## தீவழி விலக்கு

வஞ்சகர்தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற் செல்லொணாது
வாதெவரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடையர்முன் னிற்கொணாது
கொஞ்சமேனுந் தீது செய்யொணா தொருவர்மேற்
குற்றஞ் சொலொண்ணா தயற்

கோதையர்களோடு பரிகாசஞ் செயொண்ணாது
கோளுரைகள் பேசொணாது
நஞ்சுதரு மரவொடும் பழகொணா திருள்வழி
நடந்துதனி யேகொணாது
நதிபெருக்காகினதி னீஞ்சல்செய்யொண்ணாது
நல்வழி மறக்கொணாது
அஞ்சாம லரசர்முன் பேசொணா திவையெலா
மறியு மெமதருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

மருவ லொண்ணாது என்பது, மருவொணாது என்றாயிற்று-சேரக்கூடாதுஎன்பது பொருள். வாது-சொற்போர். புரியொணாது; செய்யக்கூடாது. தீது-தீங்கு. அயல் கோதையர்கள்-அயல்மகளிர். கோள் உரைகள்-கோட்சொற்கள். நஞ்சு-விஷம். ஏகொணாது-ஏகவொண்ணாது; போகக்கூடாது. பெருக்கு - வெள்ளம். (7)

ஒன்றற்கொன் றழகுசெய்வன

வாழ்மனைதனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்
வளர்சிறுவருக்கழகு கல்வி கல்விக்கழகு
மாநிலந் துதிசெய் குணமாம்
சூழ்குணமதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடி லதற்கழகுதான்

றூயதவ மேன்மை யுபகாரம் விரதம் பொறுமை
சொல்லரிய பெரியோர்களைத்
தாழ்தல் பணிவிடைபுரிதல் சீலநேசங்கருணை
சாற்று மிவையாமென்பர் காண்
சௌரிமலரோனமரர் முனிவர் முச்சுடரெலாஞ்
சரண மெமை ரட்சி யெனவே
ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே
யண்ண லெமதருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

வாழ் மனைதனக்கு - இல்லறவாழ்க்கைக்கு உரிய வீட்டுக்கு. குலம் மங்கை-உயர்குலத்துப்பிறந்த கற்புடைய மனையாள். மாநிலம் - பெரிய நிலவுலகத்திலுள்ளவர். சூழ் குணமதற்கு - நிறைந்த நற்குணத்துக்கு. தூய-பரிசுத்தமான. சொல் அரிய - சொல்லுதற்கு முடியாத [அளவிறந்த சிறப்பையுடைய.] சீலம் - நல்லொழுக்கம். கருணை-அருள். சாற்றும்-என்று சொல்லப்பட்ட. சௌரி-திருமால். மலரோன்-பிரமன். அமரர்-தேவர். முச்சுடர்கள் - (சூரியன், சந்திரன், அக்கினி என்ற) மூன்று சோதிகள். சரணம்-அடைக்கலம். (8)

ஒன்றற்கொன்று தகாதசேர்க்கை

பூததயை யில்லாத லோபியரிடத்திலே
பொருளை யருளிச் செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சனரிடத்திலே
பொல்லாத மிடி வைத்தனை

நீதியகன் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறி மாதரைத் தந்தனை
நிதானமுள வுத்தமர்க் கிங்கிதமிலாத கொடு
நீலியைச் சேர்வித்தனை
சாதியி லுயர்ந்தபே ரீனர்பின்னேசென் று
தாழ்ந்துபரவச் செய்தனை
தமிழருமை யறியாத புல்லர்மேற் கவிவாணர்
தாம்பாடவே செய்தனை
ஆதரவிலாம லிப்படிசெய்த தென் சொலா
யமல வெமதருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

பூததயை-பிராணிகளிடத்தில் அருளுடைமை. அருளிச்செய்தனை - கொடுத்தருளினை. மிடி - தரித்திரம். நீதி அகல் - நீதியற்ற. அருந்ததி என்பவள்-வசிஷ்டமுனிவருடைய மனைவி; இவள் நல்லொழுக்கத்திற் சிறந்தவள். நெறி மாதரை-கற்புவழியிற்செல்லும் மகளிரை. இங்கிதம் - குறிப்பறிந்து நடக்கும் இயல்பு; இனிய குணம். கொடு நீலி - கொடிய துஷ்டை. ஈனர் - இழிகுலத்தவர், கீழோர். தாழ்ந்து-வணங்கி. பரவ-துதிக்க. புல்லர்-அற்பர். கவிவாணர்-செய்யுள்செய்து வாழ்பவர்;கவிஞர். ஆதரவு-அன்பு, துணை. அமல - குற்றமற்றவனே! (9)

செய்யத் தக்கவை

வாலிபந்தனில் வித்தை கற்கவேண்டுங் கற்ற
வழியிலே நிற்கவேண்டும்

வளைகட றிரிந்து பொருடேடவேண்டுந்தேடி
வளரறஞ் செய்யவேண்டும்
சீலமுடையோர்களைச் சேரவேண்டும் பிரிதல்
செய்யாதிருக்கவேண்டுஞ்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டுங்கொண்டு
தியாகங் கொடுக்கவேண்டும்
ஞாலமிசை பலதருமநாட்டவேண்டும் நாட்டி
நன்றாய் நடத்தவேண்டும்
நம்பனிணையடி பூசை பண்ணவேண்டும் பண்ணி
னுமிகுபத்திவேண்டும்
ஆலமமர் கண்டனே பூதியணி முண்டனே
யனக வெமதருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

வாலிபம்-இளமைப்பிராயம். வளை கடல்-(பூமியைச்) சூழ்ந்த சமுத்திரம். வளர் அறம்-வளர்கின்ற தருமம். சீலம்-நல்லொழுக்கம். பிரிதல் செய்யாது இருக்கவேண்டும் - (அந்த நல்லொழுக்கமுடையவரைக் கூடினல் பிறகு அவரை) விட்டுப்பிரியாமலிருக்க வேண்டும். செம் தமிழ் - சிறந்த தமிழ். செம் தமிழ்ப்பாடல் பல கொள்ளவேண்டும்-ஒருவன், தன்னுடைய கொடைமுதலியவற்றைக்குறித்து வித்துவான்கள் புகழ்ந்து பாடலியற்ற அவர்களுக்குச் சம்மானம்செய்து அவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும்; இதனுற் புலவர்களாற் பாடப்படுதல் பெருஞ்சிறப்பெனக்கூறப்பட்டது- த்யாகம்-பரிசில்; சம்மானம். ஞாலம் மிசை - பூமிமீது. நம்பன்-

ஈச்வரன். இணை அடி - இருதிருவடிகள் ஆலம் அமர் கண்டனே- ஹாலாஹலம் என்னும் விஷம் தங்கிய ஸ்ரீகண்டத்தையுடைய சிவ பிரானே! சிவபிரான் தேவாசுரர் பாற்கடல் கடைந்தகாலத்துத் தோன்றிய பயங்கரமான விஷத்தை யுண்டு கண்டத்தில் நிறுத்தி அனைவரையும் காத்தருளியமை பிரசித்தம். பூதி அணி முண்டனே- திருநீறு தரித்த நெற்றியையுடையவனே! அநக-பாபமில்லாதவனே.

மேன்மேலுயர்ச்சி

தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்தியமுள புருடனாஞ்
சந்ததம் பதின்மரைக் காப்பாற் றுவோன் மிக்க
தரணிபுகழ்தரு தேவனாம்
பொன் மட்டிலாமலீந் தொருநூறுபேரைப்
புரப்பவன் பொருவி லிந்த்ரன்
புவிமீதி லாயிரம்பேர்தமைக் காப்பாற்று
புண்யவானே பிரமனாம்
நன்மைதரு பதினாயிரம்பேர்தமைக் காக்கு
நயமுடையவன் செங்கண்மா
லானு மிவன்மே லதிகமாக வெகுபேர்க்குதவு
நரனே மகாதேவனாம்
அன்மட்டு வார்குழலி பாகனே யேகனே
யண்ண லெமதருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

தன்மட்டில் - தன்னளவில். இரவாது - யாசகம் செய்யாமல். சந்ததம் - எப்போதும். பதின்மர்-பத்துப்பேர். தரணி-உலகத்தவர். புகழ்தரு-புகழ்கின்ற. மட்டு இல்லாமல் பொன் ஈந்து-அளவில்லா மற் பொன்னைக்கொடுத்து. புரப்பவன்-காப்பவன். பொருவு இல்-ஒப்பிலாத, நிகரற்ற. நன்மை தரு-நன்மையைச்செய்கின்ற. நயம் உடையவன் - இனிமைக்குணமுடையவன். செம் கண் மால்-சிவந்த திருக்கண்களையுடைய ஸ்ரீ மஹாவிஷ்ணு. மகாதேவன்-சிவபிரான். அல் மட்டு வார் குழலி பாகனே - இருள்போலக் கரியதும் (பூக்கள் சூடியுள்ளமையால்) தேன் பொருந்தியதும் நீண்டதுமான கூந்தலையுடையவளாகிய உமாதேவியை இடப்பாகத்திலுடைய சிவபிரானே. அல் - இருள். மட்டு - தேன். வார் - நீட்சி குழல் - கூந்தல். ஏகனே - ஒப்பற்றவனே. (11)

## செயற்கருஞ் செயல்

நீர்மே னடக்கலா மெட்டியுந் தின்னலா
நெருப்பை நீர்போற் செய்யலாம்
நெடிய பெருவேங்கையைக் கட்டியே தழுவலா
நீளரவினைப் பூணலாம்
பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறெனப்
பட்சமுடனே யுண்ணலாம்
பாணமொடு குண்டு விலகச்செய்யலா மரப்
பாவை பேசப் பண்ணலாம்
ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயு
மெடுக்கலாம் புத்திசற்று
மில்லாத மூடர்த மனத்தைத் திருப்பவே
யெவருக்கு முடியாது காண்

ஆர்மேவு கொன்றைபுனை வேணியா சுரர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

நெடிய-நீண்ட. வேங்கை-வேங்கைப்புலி. நீள் அரவினை பூணல் ஆம்-நீண்ட சர்ப்பங்களை ஆபரணம்போல் உடலில் தரித்துக்கொள்ளலாம். பார் மீது-பூமியின்மீது. அந்த மணற்சோற்றைப் பக்ஷமுடனே யுண்ணலாம் என்க. மரம் பாவை-மரத்தினாற்செய்த பிரதிமை. ஏர் மேவு காடி-அழகுபொருந்திய புளித்த சோற்றுநீர். ஆர் மேவு கொன்றை புனை வேணியா-அருமைபொருந்திய கொன்றை மலர்மாலையைத்தரித்த சடைமுடியையுடையவனே! ஆர்-ஆத்திமலர் மாலையையும், மேவு கொன்றை-(அழகு) பொருந்திய கொன்றை மலர்மாலையையும் என்றும் உரைகூறலாம். ஆர்-நிறைவுமாம். சுரர் பரவும்- தேவர்கள் துதிக்கப்பெற்ற. (12)

உத்தம ராவோர்

அடைக்கலமெனத் தேடிவருவோர்தமைக்காக்கு
மவனே மகாபுருடனு
மஞ்சாமலெதுவரினு மெதுபோகினுஞ் சித்த
மசைவிலன் மகாதீரனும்
தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாதுசெய்கின்ற
தோன்றலே மகாராஜனுந்
தூறிக் கலக்கின்றபேர் வார்த்தை கேளாத
துரையே மகாமேருவாம்

அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த் திரட்சிக்கு
மவனே மகாத்யாகியா
மவரவர் தாரதர மறிந்து மரியாதைசெயு
மவனே மகாவுசிதனும்
அடர்க்கின்ற முத்தலைச் சூலனே லோலனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

அடைக்கலம்-சரணம். மகாபுருடன்-சிறந்தவன். சித்தம் அசைவிலன் - மனங்கலங்காதவன். மகா தீரன் - பெரிய தைரியசாலி. ஒன்று தொடுத்துச்சொன்ன சொல் எனக்கூட்டுக. தொடுத்து-முறைப்படுத்தி, ஆரம்பித்து. தோன்றல்-ஆண்மக்களிற் சிறந்தவன். தாறி-இகழ்ந்து. கலைக்கின்றபேர்-(மனத்தை)வேறுபடுத்துகின்றவர்கள். மகாமேரு-பெரிய மேருமலைபோல நிலைகலங்காதவன். இடர்-துன்பம். த்யாகி-வரையாதுகொடுப்பவன். தாரதரம்-உயர்வுதாழ்வு. மகா உசிதன்-தகுதியறிதலிற் சிறந்தவன். அடர்க்கின்ற-(பகைவரைக்) கொல்லுகின்ற. முத்தலை சூலன்- மூன்று நுனியையுடைய சூலமென்னும் ஆயுதத்தையுடையவன். லோலன்-(உலகங்களைப் படைத்துக் காத்து அழிக்கும்) திருவிளையாடலையுடையவன். (13)

யாக்கை நிலையாமை முதலியவை

காய மொருபுற்புதம் வாழ்வு மலைசூழ்தருங்
காட்டி லாற்றின் பெருக்காங்
கருணைதருபுதல்வர் கிளை மனைமனைவி யிவையெலாங்
கானல் காட்டும் ப்ரவாகம்

மேயபுஜ பலவலிமை யிளமையழ கியையெலாம்
வெயின் மஞ்ச ளுயிர்தானுமே
வெட்டவெளிதனில்வைத்த தீபமெனவே கருதி
வீண்பொழுது போக்காமலே
நேயமுடனே தெளிந் தன்பொ டுன்பாதத்தி
னினைவுவைத் திருபோதிலும்
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க
நிமலனே யருள் புரிகுவாய்
ஆயுமறிவாளர்பணி பாதனே போதனே
யண்ண லெமதருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

புற்புதம்-நீர்க்குமிழி. பெருக்கு-வெள்ளம். கருணை தருபுதல்வர்-மிக்கஅன்புள்ளபுத்திரர். கிளை-உறவினர். கானல்காட்டும்ப்ரவாகம்-கானலில் தெரிகிற நீர்ப்பெருக்கு. மேய - (சிறப்புப்) பொருந்திய. வெயில் மஞ்சள் - வெயில்பட்ட மஞ்சளின் நிறம். தெளிந்து - அறிவுதெளிந்து. பரிவு - பக்தி. நிமலன் - நிர்மலன்; குற்றமற்றவன், பரிசுத்தன். ஆயும் அறிவு ஆளர் பணி பாதனே - (தத்துவ நூல்களை) ஆராய்ந்தறிகின்ற ஞானிகள் வணங்கப்பெற்ற திருவடிகளையுடையவனே! போதனே - ஞானஸ்வரூபியே. நீர்க்குமிழி தோன்றி நிலையில்லாமல் அழிவது. காட்டாற்றின்வெள்ளம் வற்றக்கூடியது. கானல்காட்டும் ப்ரவாஹம் பொய்த்தோற்றம். வெயில் மஞ்சள் விரைவில் வேறுபடுவது, அழிவது. வெட்டவெளிதனில் வைத்த தீபம் எளிதில் அணையக்கூடியது. தேகம்முதலியன நிலையில்லாமையால் நீர்க்குமிழிமுதலியன உவமையாகக் கூறப்பட்டன.

## திருமங்கை யிருப்பிடம்

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மாமனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
நறைகொண்ட பைந்துளவிலே
கற்புடையர்வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயிறனிலே
கடிநகரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக்கதனிலே
பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாதபேர்பாலிலே
பூந்தடந்தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத்தின் சிரசிலே
அற்பொருங்கோதை மலர்மங்கைவா ழிடமென்ப
ரண்ணலெமதருமைமதவே
ளனுதினமு மனதினிணைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

நல் பரி - நல்லலக்ஷணமுள்ள குதிரை. நாகரிகர் - நாகரிக குணமுடையவர். மா மனை - சிறந்த வீடு. நளினம் மலர் - தாமரை மலர். கூவிளம் தரு - வில்வமரம். நறை கொண்ட பைந்துளவு - பரிமளமுடைய பசுமையான துளசி; நறை-தேனுமாம். பசுமை+துளவு=பைந்துளவு. கற்பு உடையர் - பதிவிரதாதர்மமுடைய மகளிர். வாயில்தனிலே - வாசலிலே. கடி நகர் - காவலையுடைய

சிறந்த நகரம். கதிர் - ஒளி. பொற்பு - அழகு. மிக்கோர்கள் - மேலோர்கள். பொய்யாத பேர்பாலிலே-பொய்கூறாதவரிடத்திலே. பூ தடந்தன்னிலே - தாமரை முதலிய சிறந்தமலர்கள் உள்ள தடாகத்தில். போதகத்தின் சிரசிலே - யானைத்தலையில். அல் பொரும் கோதை - இருள்போலுங் கரிய கூந்தலையுடைய. மலர் மங்கை - தாமரைமலரில் வீற்றிருக்குந் திருமகள். (15)

## மூதேவி இருப்பிடம்

மிதமின்றி யன்னம் புசிப்போ ரிடத்திலும்
மிகுபாஷையோரிடத்தும்
மெய்யொன் றிலாமலே போய்பேசியேதிரியு
மிக்க பாதகரிடத்தும்
கதியொன்று மிலர்போல மசினங்கொளும் பழைய
கந்தை யணிவோ ரிடத்துங்
கடினா யெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனை யகத்தும்
ததிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ்
சார்ந்த வாட்டின் றிரளிலுஞ்
சாம்பிணை முகத்திலு மிவையெலாங் கவலைபுரி
தௌவைவா ழிட மென்பர்காண்
அதிரூப மலைமங்கை நேசனே மோழைதரு
மழக னெமதருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

மிதம் - அளவு. மிகுபாஷையோர் - அதிகமாய்ப்பேசுபவர்; பயனில்சொற் பேசுபவர். பாதகர் - பாவிகள். மலினம் - அழுக்கு. சீறி - கோபித்து. கன்னி - பெண். ததி சேர் கடம் - தயிர்க்குடம். கர்த்தபம் - கழுதை. சார்ந்த - பொருந்திய. திரள் - கூட்டம். கவலை புரி - விசாரத்தையுண்டாக்குகின்ற. தௌவை - மூதேவி. அதி ரூபம் - மிக்க வடிவழகு. மலைமங்கை நேசனே - இமயமலையின் புதல்வியாகிய பார்வதிதேவியினிடத்து அன்புடையவனே!

தூறுதுண மிரண்டினும் பயன்படாமை.

குணமற்ற பேய்முருங்கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டு மென்ன
குரைக்கின்றநாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப்போகி லென்ன
மணமற்ற செம்முருக்கதுபூத் தலர்ந்தென்ன
மலராதுபோகி லென்ன
மதுரமில்லா வுவர்க்கடனீர் கறுத்தென்ன
மாவெண்மையாகி லென்ன
உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படரா
துலர்ந்துதான் போகிலென்ன
வுதவாதபேர்க்கு வெகுவாழ்வு வந்தாலென்ன
வோங்கு மிடிவரி லென்னகாண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகாபரணனே
யாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

குட்டம் - ஒருவிதநோய், சொறிவியாதி. நாய் மடி சுரந்து என்ன - நாயின்மடியில் பால்சுரந்தாலென்ன? மதுரம் - இனிமை. உவர் கடல் - உப்புநீர்ச் சமுத்திரம். மா - மிக்க. உணவு அற்ற- உண்ணுதற்கு உபயோகப்படாத. ஓங்கும் மிடி - மிக்க தரித்திரம். அணி உற்ற பைங்கொன்றை மாலிகா ஆபரணனே - அழகுபொருந்திய பசுமையான [புதிய] கொன்றைமாலையை ஆபரணமாகத் தரித்துள்ளவனே! பசுமை+கொன்றை=பைங்கொன்றை. ஆதியே - முதல்வனே! (17)

## துறைவுற்றுங் குணங்கெடாமை

தறிபட்ட சந்தனக்கட்டை பழுதாயினுஞ்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினு மதுகொண்டு
சாரமதுரங் குறையுமோ
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந்தாலுமதி
னீள்குண மழுங்கிவிடுமோ
நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தி
னிறையு மாற்றுக் குறையுமோ
கறைபட்ட பைம்புயன் மறைத்தாலு மதுகொண்டு
கார்மதி கனம் போகுமோ
கற்றபெரியோர்மகிமை யற்பரறிகிலரேனுங்
காசினிதனிற் போகுமோ
அறிவுற்றபேரை விட்டகலாத மூர்த்தியே
யையனே யருமை மதவே

எனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

தறிபட்ட - வெட்டப்பட்ட. சந்தனக்கட்டை பழுதாதல் - தேய்தல். சார் மணம் - (அதனிடத்துப்) பொருந்திய வாசனை. சுவறிட - வற்ற, சுண்ட. அதுகொண்டு - அதனால். சாரம் மதுரம் - சிறந்த இனிமை. நிறைபட்ட கதிர் மணி - நிறைந்த ஒளியுள்ள இரத்தினம். கறை பட்ட பைம்புயல் - கருமைநிறம்பொருந்திய பசுமையான மேகம். கதிர் மதி - சூரிய சந்திரர். கனம் -மேன்மை. அறிகிலர் ஏனும் - அறியாதவராலும். காசினி - பூமி. அறிவு உற்ற பேரை - ஞானிகளை. மூர்த்தி - திருவுருவமுடையவன். (18)

இதனைக்கண்டு மகிழ்வ திதுவெனல்

தந்தைதாய் மலர்முகங் கண்டுநின் றுலிப்ப
தவர்தந்த சந்ததியதாஞ்
சந்த்ரோதயங்கண்டு பூரிப்ப துயர்வாவி
தங்கு பைங்குமுத மலராம்
புந்திமகிழ்வா யிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்கு தாமரை மலர்களாம்
போதவும் புயல்கண்டு கண்களித்தே நடம்
புரிவது மயூர வினமாம்
சிந்தைமகிழ்வா யுதவு தாதாவினைக் கண்டு
சீர்பெறுவ திரவலர் குழாந்
திகழ்நீதி மன்னரைக் கண்டு களிகூர்வதிச்
செகமேலா மென்பர் கண்டாய்

அந்தியம்வானனைய செஞ்சடாடவியனே
யமலனே யருமை மதவே
ளறுதினமு மனநினைதரு சதுரகிரிவளா
றறப்பளீசுர தேவனே.

மலர்முகம் - மலர்ந்த முகம், சந்தோஷமுகம். அலிப்பது - மகிழ்வது. சந்ததி - மக்கள். பூரிப்பது - மகிழ்ச்சி மிகுதியாகக் கொள்வது. உயர் வாவி - உயர்ந்த தடாகம். பைங்குமுதம் - பசுமையான ஆம்பல். ஆம்பல் சந்திரோதயமானதும் மலர்தலால், அதனை மகிழ்வதாகக் குறித்தார்; பிறவும் இனமே. புந்தி - புத்தி. இரவி - சூரியன். அகம் - மனம். பொங்கு - பொலிவுள்ள, விளங்குகின்ற. போதவும் - மிகவும். புயல்-மேகம். நடம் புரிவது - நர்த்தனஞ்செய்வது. மயூரம் இனம் - மயிலின் கூட்டம். தாதா - கொடையாளி. சீர் பெறுவது - சிறந்தமகிழ்ச்சி கொள்வது. இரவலர் குழாம் - யாசகர் கூட்டம். திகழ் - விளங்குகின்ற. களி கூர்வது - சந்தோஷம் மிகுதியாகக்கொள்வது. செகம் - உலகத்திலுள்ளவர். அந்தி அம் வான் அனைய - அந்திக்காலத்துச் செவ்வானத்தைப்போன்ற. செம் சடா அடவியனே-செஞ்சடைக்காட்டையுடையவனே! அமலனே - குற்றமற்றவனே! (19)

நற்குணங்களுக் கிடமாகாதவர்

வெறிகொண்ட மற்கடம் பேய்கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ்சொறிப் புதலிலே
வீழ்ந்து தேள்கொட்டிடச் சன்மார்க்க மெள்ளளவு
மேவுமோ மேவாதுபோல்

குறைகின்ற புத்தியா யதிலற்பசாதியாய்க்
கூடவே யிளமை யுண்டாய்க்
கொஞ்சமா மதிகாரமுங் கிடைத்தான் மிக்க
குவலயந்தனி லவர்க்கு
நிறைகின்ற புத்தியுஞ் சீலமும் மேன்மையும்
நிதானமும் பெரியோர்கண்மேல்
நேசமு மீகையு மிவையெலாங் கனவிலும்
நினைவிலும் வரா மெய்கண்டாய்
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

வெறிகொண்ட மற்கடம் - பைத்தியம்பிடித்த (இயல்பில் மிக்க சேஷ்டையுள்ளதாகிய) குரங்கு. வெம் காஞ்சொறி புதலிலே - கொடிய பூனைக்காஞ்சொறியென்னும் செடியின் புதரிலே. காஞ்சொறியென்பது, உடம்பின்மேற் பட்டவளவிலே மிக்க தினவையும் அரிப்பையும் உண்டாக்குவதொரு பூண்டு. சன்மார்க்கம் - நல்ல சாந்தமான வழி. மேவாமைபோல் - அங்ஙனம் அது பொருந்தாத விதம் போலவே. மிக்க குவலயந்தனில் - பெரிய பூமியில். நிதானம் - (காரியங்களில்) மிக்க விரைவுபடாத பொறுமை. அறைகின்ற - சிறப்பித்துச்சொல்லப்படுகின்ற. சுருதி-வேதம். வள்ளல்-வரையாதுகொடுப்பவன்; அளவில்லாமல் அருளுந்தன்மையுடையவன். (20)

இதுவு மின்னமுறையது மெனல்

தன்னால் முடிக்கவொண் ணுத காரியம்வந்து
    தான்முடிப்போன் றமையனுந்
தன்றலைக் கிடர்வந்தபோது மீட்டுதவுவோன்
    ருய்தந்தை யென்ன லாகும்
ஒன்னார் செயுங்கொடுமையான் மெலிவு வந்தபோ
    துதவுவோ னிட்ட தெய்வம்
யுத்திபுத்திகள்சொல்லி மேல்வருங் காரிய
    முரைப்பவன் குரு வென்னலாம்
எந்நாளும் வருநன்மைதீமை தனதென்னவே
    யெண்ணிவருவோன் பந்துவா
மிருதய மறிந்து தன்சொற்படி நடக்குமவ
    னெவனெனினு மவனே சுதன்
அந்நாரமும் பணியு மெந்நாளுமே புனையு
    மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
    ரறப்பளீசுர தேவனே.

ஒண்ணாத - கூடாத, முடியாத. ஒன்னார் - பகைவர். மெலிவு-தளர்ச்சி, சோர்வு. இட்டம் தெய்வம் - விரும்புதற்குரிய வழிபடு கடவுள். இருதயம் - உள்ளக்கருத்து. சுதன் - புத்திரன். அம் நாரம் - அழகிய நீர். அ நாரம் என்றும் பிரிக்கலாம்; அப்போது, அ என்பது, உலகுஅறிசுட்டாய்ப் பிரசித்தத்தைக் குறிக்கும். இங்கு நீர் என்பது, கங்கைநதியின் ஜலத்தைக் குறிக்கும். பணி - சர்ப்பம்.

புனேயும் - தரித்துள்ள. சிவபிரான் வானத்தினின்று பூமிநோக்கி வந்த கங்காஜலத்தைத் தம் முடியில் தரித்தமையும், சர்ப்பாபரணத்தை அணிந்துள்ளமையும் பிரசித்தம். (21)

கூடிப் பயன்படல்

செத்தைபலகூடி யொருகயிருயி னதுகொண்டு
திண்கரியையுங் கட்டலாந்
திகழ்ந்தபலதுளிகூடி யாருயின் வாவியொடு
திரளேரி நிறைவிக்கலாம்
ஒத்த நுண்பஞ்சுபல சேர்ந்து நூலாயிடி
னுடுத்திடுங் கலையாக்கலா
மோங்கிவரு கோலுடன் சீலையுங் கூடினு
லுயர்கவிகையாக் கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலத்தோடு தவிடும்கூடின்
மல்குமுளை விளைவிக்கலாம்
மனமொத்தநேயமொடுகூடி யொருவர்க்கொருவர்
வாழின் வெகுவெற்றி பெறலாம்
அற்றகனியைப்பொருத் தரிபிரமர் தேடரிய
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

திண் கரி - பலமுள்ள யானை. திகழ்ந்த - விளங்குகின்ற. வாவி - தடாகம். திரள் - திரண்ட, கூட்டமான. ஒத்த நுண் பஞ்சு பல - (ஒன்றையொன்று) ஒத்த மெல்லிய பஞ்சுகள்பல.

கலை - ஆடை. ஓங்கி - உயர்ந்து. சீலை - துணி. கவிகை - குடை. மற்றும்-மேலும். தண்டுலம் - அரிசி. மல்கும் - மிகுந்த. மனம்ஒத்த நேயமொடு - மனமொத்த பிரீதியோடு. அற்ற கனியை பொருத்து அரி - அற்ற பழத்தைப் பொருத்திய விஷ்ணு; கண்ணபிரான் அற்றகனியைப் பொருத்திய வரலாறு, பாரதத்திலுள்ளது. தேடு அரிய - தேடிக் காண்பதற்கு அருமையான. சிவபிரான் பிரம விஷ்ணுக்களாற் காணமுடியாதவரென்க. (22)

ஒன்றனில்லாமையாற் பாழ்படல்

தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண
சந்த்ரனிகர் முக சூனியஞ்
சற்சன ரிலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரியநகர் சூனியம்
மேம்பாடிலாத மன்னவர்கள்வந் தாள்வதே
மிக்க தேசச் சூனியம்
மிக்கசற்புத்திர னிலாததே நலமான
வீறுசேர் க்ருக சூனியம்
சோம்பாத தலைவ ரில்லாததே வளமுடன்
சொல்லுயர் சபா சூனியம்
தொல்லுலகி லெவர்க்கு மாதிதிய மில்லதே
சுத்த சூனிய மென்பர்காண்
ஆம்பல்வதனத்தனைக் குகனையீன் றருள்செய்த
வத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

தாம்பூல தாரணம் - தாம்பூலம் தரித்தல். வரு பூர்ண சந்திரன் நிகர் முகம் - விருத்தியடைந்து வந்த முழுச்சந்திரனையொத்த அழகிய முகத்துக்கு. சூனியம் - பாழ். மேம்பாடு - மேன்மை. மிக்க சத்புத்திரன் - மேலான நல்ல புதல்வன். நலம் ஆன - நன்மை பொருந்திய. வீறு - சிறப்பு. சோம்பாத - சோம்பலில்லாத. வளமுடன் சொல் உயர் - வளத்தோடு புகழ் மிக்க. தொல் உலகு - பழைய உலகம். அனைவர்க்கும் - எல்லோர்க்கும். மா நிதியம் - பெரிய ஐசுவரியம். சுத்த சூனியம் - முழுப்பாழ். ஆம்பல் வதனத்தன் - யானைமுகக்கடவுளாகிய விநாயக மூர்த்தி. குகன் - சுப்பிரமணியக்கடவுள். ஈன்று அருள்செய்த - பெற்றருளிய. அத்தன் - ஸ்வாமி. (23)

## மூடர்தாரதம்மியம்

பெண்புத்தி கேட்கின்ற மூடருந் தந்தைதாய்
 பிழை புறஞ்சொலு மூடரும்
பெரியோர்கள் சபையிலே முகமேடேறி வந்தது
 பிதற்றிடும் பெரு மூடரும்
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
 பழிதொழில்செய்திடு மூடரும்
பற்றற்றபேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்ப்
 பரிதவித்திடு மூடரும்
கண்கெட்ட மாடென்ன வோடி யிரவலர்மீது
 காய்ந்து வீழ்ந்திடு மூடருங்
கற்றறிவிலாத முழுமூடருக் கிவரெலாங்
 கான்மூட ரரைமூடர் காண்

அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோ
மையனே யருமை மதவே
னனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே.

புறம்சொலும் - (பலரும் அறிய எடுத்து) வெளிச்சொல்லுகிற. முகடு ஏறி நின்று - முன்னிடத்தில் எழுந்து நின்று. வந்தது பிதற்றிடும் - வாய்க்குவந்ததைத் தாறுமாறாய்ப் பிதற்றுகிற. பண்பு உற்ற சுற்றம் - நற்குணம் பொருந்திய தமது பந்துவர்க்கத்தார். பற்று அற்ற பேர் - தம்மிடத்து மெய்யன்பு இல்லாதவர்கள். இரவலர் - யாசகர். காய்ந்து - கோபித்து. அண் - (தன்னைச் சரணமாகச்) சார்ந்த. கற்ற நாவலர்க்கு ஆகவே - கல்வியில்தேர்ந்த கவியாகிய சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டாக. தூது போம் - (அவரது மனைவியாராகிய பரவை நாய்ச்சியாரிடத்துத்) தூதுசென்றருளின. ஐயனே - சிவபிரானே ! சிவபிரான் தமது அடியவராகிய சுந்தரமூர்த்திநாயனார் வேண்டுகோளின்படி அவரது மனைவியாராகிய பரவையாரிடத்துத் தூது சென்றருளினரென்பது, வரலாறு. (24)

இதற்கிது வேண்டுமெனல்

தனக்கு வெகுபுத்தியுண்டாயினும் வேறொருவர்
தம்புத்தி கேட்க வேண்டுந்
தானதிகசூரனே யாயினுங் கூடவே
தளசேகரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்துவானாயினுந் தன்னினுங்
கற்றோரை நத்த வேண்டுங்

காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்திரி வேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாயினுஞ்
சுதிகூட்ட வொருவன் வேண்டுஞ்
சுடர்விளக் காயினு நன்றாய் விளக்கிடத்
தூண்டுகோ லொன்று வேண்டும்
அனற்கண்ணனே படிக சங்கநிகர் வண்ணனே
யையனே யருமை மதவேள்
வ
னுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

வேறு ஒருவர்தம் புத்தி-வேறொரு தக்கவர் சொல்லும் அறிவு. தள சேகரங்கள்-சேனைகளை மிகுதியாகச் சேகரித்துக்கொள்ளுதல். கனக்கின்ற - பெருமைபொருந்திய. நத்தல் - விரும்பிச்சேர்தல். காசினி-பூமி. ஒரு குடையில் ஆண்டாலும்-ஒற்றைவெண்கொற்றக் குடையின்கீழ் [தனியரசாட்சியின்கீழ்] அரசாண்டாலும். கருத்து உள்ள மந்திரி வாசலில் வேண்டும் - ஆலோசனைத்திறமுடையமந் திரியைத் தனதுசபையில்உடையனாதல்வேண்டும். தொனிக்கின்ற- (மதுரமாகப்) பாடுகின்ற. சுதி - ச்ருதி. சுருதிகூட்டலென்பது - முதல் நாதமாகிய ஷட்ஜத்தோடு பஞ்சமமென்னும் சுவரத்தை மனோரஞ்சன மாம்படி சுத்தமாப் பொருத்துதல். சுடர் விளக்கு - ஒளியுள்ளதீபம். அனல் கண்ணனே - (நெற்றியில்) நெருப்புக் கண்ணையுடையசிவபிரானே! படிகம்சங்கம் நிகர் வண்ணனே-பளிங் கையும் சங்கத்தையும்போன்ற வெண்ணிறமுடையவனே! சங்கம்- கூட்டமுமாம். (25)

## வறுமையின் கொடுமை

மேலான சாதியி லுதித்தாலு மதிலென்ன
வெகுவித்தை கற்று மென்ன
மிக்கவதிரூபமொடு சற்குண மிருந்தென்ன
மிகுமானியாகி லென்ன
பாலான மொழியுடையனா யென்ன வாசார
பரனா யிருந்து மென்ன
பார்மீது வீரமொடு ஞானவானா யென்ன
பாக்கிய மிலாதபோது
வாலாயமாய்ப் பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்த சுற்றமு மிகழுமே
மரியாதையில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுந் தூறு சொல்வாள்
ஆலால முண்ட கனிவாயனே நேயனே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

மிக்க அதி ரூபம் - மிகவும் அதிகமான வடிவழகு. மானி - மானமுடையவன். பால் ஆன மொழி - பால்போலும் இனிய சொல். ஆசார பரன் - ஒழுக்கத்திற் சிறந்தவன். பார் மீது - பூமியில். பாக்கியம் - செல்வம். வாலாயமாய் - சாதாரணமாய். சலித்திடுவள் - வெறுப்புக் கொள்வாள், தணியாக்கோபமுறுவள். சுற்றம் - உறவினர். தூறு - பழிமொழி. ஆலாலம் - ஹாலாஹலமென்

னும் விஷம். கனி வாயன்-கொவ்வைக்கனிபோலுஞ் சிவந்தவாயை யுடையவன். நேயன் -(பிராணிகளிடத்து) அன்புடையவன். (26)

ஈனத்துவம்

இரப்பவன் புவிமீதி லீன னவனுக் கில்லை
யென்னுமவ னவனி லீன
னீகின்ற பேர்தம்மை யீயாமலே கலைத்
திடுமூட னவனி லீனன்
உரைக்கின்ற பேச்சிலே பலனுண்டெனக் காட்டி
யுதவிடா னவனி லீன
னுதவவே வாக்குரைத் தில்லையென்றே சொலு
முலுத்தனே யவனி லீனன்
பரக்கின்ற யாசகர்க் காசைவார்த்தைகள் சொலிப்
பலகா லலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடு கொடியபாவியே
பாரி லெல்லோர்க்கு மீனன்
அரக்கிதழ்க் குமுதவா யுமைநேசனே யெளிய
ரமுதனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

இரப்பவன் - யாசிப்பவன். ஈனன் - இழிந்தோன். அவனுக்கு- அந்த இரப்பவனுக்கு. அவனில் - அந்த இரப்பவனினும். பலன் - பயன். உதவிடான் - கொடாதவன். உலுத்தன் - லோபி. பரக்கின்ற - எங்கும்பரவித் திரிக்கின்ற. பலகால் - பலமுறை. எல்

லோர்க்கும் - ஈனர் எல்லாரினும் அரக்கு இதழ் குமுதம் வாய் - செந்நிறமுள்ள இதழ்களுடைய ஆம்பல் மலர்போன்ற சிவந்த வாய். எளியர் அமுதனே - எளியவர்களுக்கு அமுதம்போல் இனியவனே!

(27)

### நன்னகர்

வாவிபல கூபமுடனுறு நருகு சேர்வதாய்
மலை காதவழியி லுளதாய்
வாழைகமுகொடுதெங்கு பயிராவதாய்ச் செந்நெல்
வயல்கள் வாய்க்கால்க ளுளதாய்
காவி கமலங் குவளை சேரேரி யுள்ளதாய்க்
கனவர்த்தகர் மறைவலோர்
காணரிய பலகுடிக ணிறைவுள்ளதாய் நல்ல
காவல னிருக்கை யுளதாய்த்
தேவராலய மாடல்பாட லணிமாளிகை
சிறக்கவுளதாய்ச் சற்சனர்
சேருமிடமாகு மோரூர்கிடைத் ததிலதிக
சீவனமுமே கிடைத்தால்
ஆவலொ டிருந்திடுவதே சொர்க்கவாசமென்
றறையலா மருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

வாவி - தடாகம். கூபம் - கிணறு. கமுகு - பாக்குமரம். காவி - நீலோற்பலமலர். கமலம் - தாமரைமலர். குவளை - கருநெய்

தல் மலர். மறை வலோர் - வேதம்வல்ல பிராமணர். காண் அரிய- காண்பதற்கு அருமையான. காவலன் - அரசன். இருக்கை - இருக்குமிடம்; அரண்மனே. அணி - அழகு, வரிசை. அதிகசீவனம்- பிழைத்தற்குஉரிய மேம்பட்ட உத்தியோகம். அறையலாம் - சொல் லலாம். (28)

மருந்துவன்

தாதுப்பரீக்ஷை வருகால தேசத்தொடு
சரீர லட்சண மறிந்து
தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங்கணர் சித்தர்
தமது வாகட மறிந்து
பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடு பஸ்மம்
பிழையாத மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குண வாகடம்
சோதித்து மூலிகாவித நிகண்டுங் கண்டு
தூய தைலம் லேகியஞ்
சொல்பக்குவங்கண்டு வருரோக நிண்ணயந்
தோற்றியே யபிர்த காமாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடைய ஆயுர்வேத
னுக்கு மெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

தாது - நாடி. தந்வந்திரி என்பவர் - தேவவைத்தியர்; விஷ்ணு வின் அம்சமானவர்; திருப்பாற்கடல்கடைந்தகாலத்து அதனினின் று

தோன்றியவர். கும்பம் முனி - குடத்தில் தோன்றியவராகிய அகத்திய முனிவர். தேரர் - தேரையர். வாகடம் - வைத்தியநூல். பேதம் - பலவகைப்பட்ட. குளிகை - மாத்திரை. சுத்தி வகை - (சரக்குக்களைச்) சுத்திசெய்யும் விதம். மாத்திரை பிரயோகம்-மாத்திரையைப் பிரயோகிக்கும் முறை. பிழையாது - தவறாமல். செந்தூரம் - லிங்கூரம். மூலிகா விதம் - மூலிகைவகைகள். நிகண்டு - சொற்பொருள் உணர்தற்குக் கருவியாகிய நூல். தூய - பரிசுத்தமான. வரு ரோகம் நிண்ணயம் தோற்றி - உண்டாகிய நோயின்னதென்று நிச்சயித்து அறிந்ததை வெளியாக்கி. அமிர்தம் கரம் ஆப்- தேவாமிர்தம்போல் பிணி மூப்பு மரணங்களை யொழிக்கும் ஹஸ்த விசேஷ முடையவனாய்: கைவாசியுள்ளவனாய் என்க. ஆதி பெரு கேள்வி உடையனாய் - முதன்மையாகிய (பெரியோரிடத்துக் கேட்டறிந்த) நூற்கேள்வியுடையவனாய். ஆயுர் வேதன் - ஆயுர்வேதமாகிய வைத்தியசாஸ்திரத்தைக் கற்றறிந்த வைத்தியன். (29)

வீண்செயல்

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீணுரை
விரும்புவோ ரவரின் வீணர்
விருந்துகண் டில்லைடனக்கஞ்சி யோடிமறை
கிரகிலோ ரவரின் வீணர்
நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாடி யவர்மேற் கவி சொல்வார்
நானிலந்தனில் வீண ரவரினும் வீணரே
நரரைச் சுமக்கு மெளியோர்
தேட்டறிவிலாத பெருவீணரோ யவரினுஞ்
சேரொரு வரத்துமின்றிச்

செலவுசெய்வோ ரதிகவீணராம் வீணாய்த்
திரியுமெளியேனை யாட்கொண்
டாட்டஞ் செயும் பதாம்புய முடியின்மேல் வைத்த
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

வேட்டகம் = வேட்ட அகம்; கல்யாணம் செய்துகொண்ட வீடு; மாமனார்மாமியார்வீடு. அவரின் - அவரைக்காட்டிலும். இல்லாள்தனக்கு - மனைவிக்கு. விரகு - உணர்ச்சி. நாட்டம் தரும் கல்வி - ஆராய்ந்தறியும் திறத்தைத் தருகின்ற கல்வி. நாட்டம் - கண்ணுமாம்; அகக்கண்ணாகிய அறிவை உணர்த்தும். நாடி - ஆராய்ந்து, விரும்பி. அவர்மேல் - கல்வியறிவில்லாதவர்மீது. நானிலம் - பூமி. நரர் - மனிதர். ஆள்கொண்டு - அடிமைகொண்டு ஆட்டம் செயும் பத அம்புயம் - நடனஞ்செய்கின்ற திருவடித் தாமரை மலர். முடியின்மேல் - (எனது) தலைமீது. (30)

இவையே போதுமெனல்

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர்
பூவலஞ் செயவேண்டுமோ
பொல்லாத கொலைகளவிலாத நன்னெறியுளோர்
புகழறஞ் செயவேண்டுமோ
நையாத காமத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செயவேண்டுமோ
நன்மனச்சுத்தி யுண்டானபேர் மேலுமொரு
நதி படிந்திட வேண்டுமோ

மெய்யாளி னடியரைப் பரவுவோ ருன்பதம்
விரும்பி வழிபடவேண்டுமோ
வேதியர்தமைப் பூசைபண் ணுவோர் வானவரை
வேண்டி யர்ச்சனை செய்வரோ
ஐயா றுடன் கமலை சோணுசலந் தில்லை
யதிபனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

வாய்மை - சொல். சீலம் - நல்லொழுக்கம். சார்ந்துளோர் - பொருந்தியுள்ளவர். பூ வலம் செய - பூமிப்பிரதக்ஷிணஞ்செய்ய. நல் நெறி-நன்னெறி; சன்மார்க்கம். நையாத காமத்தை - அழியாத [குறையாத]சிற்றின்பவாசையை மஞேசுத்தி-மனப்பரிசுத்தம். படிந்திட-ஸ்நானஞ்செய்ய. பரவுவோர்-துதிப்பவர். வழிபட - வணங்கிப் பூசிக்க. வானவர் - தேவர். ஐயாறு - திருவையாறு. கமலை - திருவாரூர். சோணுசலம் - திருவண்ணுமலை. தில்லை - சிதம்பரம். இவை - சிவஸ்தலங்கள். அதிபன் - தலைவன். (31)

அரிய ராவோர்

பதின்மரி லொருத்தர் சபைமெச்சிடப் பேசுவோர்
பாடுவோர் நூற்றி லொருவர்
பார்மீதி லாயிரத் தொருவர் விதிதப்பாது
பாடி ப்ரசங்கமிடுவோர்
இதனருமை யறிகுவோர் பதிஞயிரத் தொருவ
ரிதையறிந் திதய மகிழ்வா

யீகின்றபேர் புவியிலே யருமையாகவே
யிலக்கத்திலே யொருவராம்
துதிபெருக வருமூன்றுகாலமு மறிந்த மெய்த்
தூயர் கோடியி லொருவராந்
தொல்லுலகுபுகழ் காசி யேகாமிரங் கைலை
சூழு மவிநாசி பேரூர்
அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
யத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதிலினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

...ின்மரில் - பத்துப்பேரில். பார்மீதில் - பூமியின்மேல். விதி ...து - முறைமைதவறாமல். இதன் அருமை - இந்தப்பிரசங்கத்...ன் அருமை. இதயம் மகிழ்வு ஆய் - மனம் மகிழ்ந்து. இலக்கம் - லக்ஷம். துதி பெருக வரும் - மிகுதியாய்த் தோத்திரம் செய்யும்படி தோன்றிய. மெய் தூயர் - உண்மையாகிய பரிசுத்தமுடையவர். தொல் உலகு - பழமையாகிய உலகத்திலுள்ளவர். ஏகாம்ரம் என்பது, காஞ்சியிலுள்ள சிவஸ்தலம். சூழும் அவிநாசி - அன்பர் அடைந்து கடவுளைத் தியானிக்கப்பெற்ற அவிநாசியென்னுந் தலம். பேரூர் வெண்காடு செங்காடு காளத்தி என்பவை-சிவஸ்தலங்கள். அதிகம் உள - மிக்க மகிமையுள்ள. காளத்தி - ஸ்ரீகாளஹஸ்தி. அத்தன் - தலைவன். (32)

சதனம்

சொல்லரிய கருடன் வானர மரவ மூஞ்சூறு
சூகரங் கிரி கலைமான்

றுய்ய பாரத்வாச மட்டை யெலி புன்கூகை
சொற்பெருக மருவு மாந்தை
வெல்லரிய கரடி காட்டான் பூனை புலி மேல்
விளங்கு மிருநா வுடும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றியுண் டதிக நலமாம்
ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைதாக்க
லொருதடை யிருத்தல் பற்ற
லொருதும்ம லாணையிட லிருமல் போகேலென்ன
வுபசுருதி சொல்லிவை யெலாம்
அல்லறரு நல்லவல வென்பர் முதியோர்பாவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

சொல் அரிய கருடன் - சொல்லுதற்கு அருமையான சிறப்புடைய கருடன். சூகரம்- பன்றி. துய்ய பாரத்வாசம்-பரிசுத்தமான சரிக்குருவி. புல் கூகை - அற்பத்தன்மையுள்ள கோட்டான்; ஓர் பருந்துமாம். சொல் பெருக மருவும் - சொற்கள் மிகுதியாகப் பொருந்திய; அதிகமாகக் கத்துந்தன்மையுள்ள. வெல் அரிய - ஜயிப்பதற்கு அருமையான. காட்டு ஆன் - காட்டுப்பசு. இரு நா - இரண்டு நாக்கு. அதிகம் நலம் - மிக்க நன்மை. ஒல்லையின் - விரைவாக. தலை தாக்கல் - தலையிற்படுதல். பற்றல் - பிடித்துக்கொள்ளுதல். போகேல் - போகாதே. உபசுருதி - சமீபத்திற் கேட்கப்படும் சொல். அல்லல் - துன்பம். முதியோர் பாவும் - பெரியோர் துதிக்கப்பெற்ற. (33)

*f*

நற்பொருளிற் குற்றம்

பேரான கங்காநதிக்கு மதன்மேல்வரும்
 பேனமே தோஷமாகும்
பெருகிவளர் வெண்மதிக்குள்ளவொர் களங்கமே
 பெரிதான தோஷமாகும்
சீரார் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
 சீற்றமே தோஷமாகுந்
தீதின்முடிமன்னவர் விசாரித்திடா தொன்று
 செய்வ தவர்மேற் றோஷமாம்
தாராளமா மிகத்தந்துளோர் தாராமை
 தானிரப்போர் தோஷமாஞ்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்ப தவர்
 தாலஞ்செய் தோஷமாகும்
ஆராயு மொருநான் மறைக்கு மெட்டாதொளிரு
 மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினிணைதரு சதுரகிரிவள
 ரறப்பளீசுர தேவனே.

பேர் ஆன - பேர்பெற்ற. பேர் - பிரசித்தி. பேனம் - நுரை. பெருகி வளர் - (கலைகளால்) வளர்ந்து நிறைகிற. வெள் மதிக்கு - வெண்ணிறமான சந்திரனுக்கு. உள்ள களங்கம் - நடுவிலுள்ள களங்கம். சீர் ஆர் தபோதனர்க்கு - சிறப்புடையரான முனிவர்களுக்கு. தபோதனர் - தவத்தையே செல்வமாக வுடையவர். சீற்றம் - கோபம். தீது இல் - குற்றமில்லாத. முடி மன்னர் - கிரீடாதி

பதிகளான அரசர்கள். விசாரித்திடாது - ஆராயாமல். இரப்போர்-யாசகர். நாவும் - நாக்கு. ஆராயும் - (தத்துவப்பொருளை) ஆராய்கின்ற. ஒரு நால் மறைக்கும் - ஒப்பற்ற நான்கு வேதங்களுக்கும். நான்கு வேதங்கள் - இருக்கு, யஜுசு, சாமம், அதர்வணம் என்பன. ஒளிரும் - விளங்குகின்ற. அண்ணல் - பெருமையிற் சிறந்தவன்.

மேலான பொருள்

சூழி சுத்தமாயிருந் ததிலும் படைக்கான
துரக மோர்மாணிக்க மாஞ்
சூழ்புவிக் கரசனு யதிலே விவேகமுள
துரையு மோர்மாணிக்க மாம்
பழுதற்ற வதிரூபவதியுமாய்க் கற்புடைய
பாவை யோர்மாணிக்க மாம்
பலகலைகள் கற்றறி யடக்கமுள பாவலன்
பார்க்கி லோர்மாணிக்க மாம்
ஒழிவற்ற செல்வனு யதிலே தியாகியா
முசித னோர்மாணிக்க மா
முத்தமகுலத்துதித் ததிலுமோ மெய்ஞ்ஞான
முடைய னோர்மாணிக்க மாம்
அழிவற்ற வேதாகமத்தின்வடிவாய் விளங்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

படைக்கு ஆன துரகம் - சேனைக்குத்தக்க குதிரை; போர்புரிதற்கு ஏற்ற குதிரையென்க. மாணிக்கம் ஆம் - மாணிக்கம் போற்

சிறந்ததாம். விவேகம் - பகுத்தறிவு. பழுது அற்ற - குற்றமில்லாத. அதி ரூபவதி - மிக்க வடிவழகுடையவள். கற்பு - பதிவிரதா தருமம். பாவை - சித்திரப்பதுமைபோல் அழகிய பெண். கலைகள் - சாஸ்திரங்கள். பா வலன் - செய்யுள் இயற்றவல்ல வித்துவான். கவிஞன். ஒழிவு அற்ற - நீங்காத. தியாகி - கொடையாளி. உசிதன் - தக்கோன். மெய் ஞானம் - உண்மையறிவு. ஆகமம் - சமய நூல். (35)

கவிஞர் வறுமை

எழுதப் படிக்க வகைதெரியாத மூடனை
யிணையிலாச் சேட னென்று
மீவதில்லாத கனலோபியைச் சபையதனி
லிணையிலாக் கர்ண னென்றும்
அழகற்ற வெகுகோரரூபத்தை யுடையோனை
யதிவடிவ மார னென்று
மாயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
யாண்மைமிகு விஜய னென்றும்
முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழி யரிச்சந்த்ர னென்றும்
மூதுலகி லிவ்வணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்ப தென்னோ
அழலென வுதித்துவரு விடமுண்ட கண்டனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

இணை இலா-ஒப்பில்லாத. சேடன் - ஆதிசேடன். கன லோபி- மிக்க லோபகுணமுடையவன். கோர ரூபம் - விகாரமான உருவம். அதி வடிவம் மாரன் - மிக்கவடிவழகுடைய மன்மதன். பேடி - ஆண்மையில்லாதவன். விஜயன் - அருச்சுனன். கவி ராஜர் - செய்யுள் செய்யவல்ல சிறந்த புலவர். முறை இன்றி - கிரமமில்லாமல். ஏற்பது - இரப்பது. அழல் என - அக்கினிபோல. உதித்து வரு - (பாற்கடலினின்று) தோன்றிய. (36)

கவிஞன்

தெள்ளமிர்ததாரையென மதுரங்கதித்தபைந்
 தேன்மடை திறந்ததெனவே
 செப்புமுத்தமிழினொடு நாற்கவிதை நாற்பொரு
 டெரிந்துரைசெய் திறமையுடனே
விள்ளரிய காவியத் தாட்பொரு ளலங்காரம்
 விரிவிலக்கண விகற்பம்
 வேறுமுள தொன்னூல் வழங்கு முலகத்தியல்பு
 மிக்க ப்ரபந்த வண்மை
உள்ளவெல்லாமறிந் தலையடங்குங் கடலை
 யொத் ததிகசபை கண்டபோ
 தோங்கலை யொலிக்கின்ற கடல்போற்ப்ரசங்கம
 துரைப்பவன் கவிஞருகும்
அள்ளி விடமுண்ட கனிவாயனே நேயனே
 யமலனே யருமை மதவே
 ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
 ரறப்பளீசுர தேவனே.

அம்ருத தாரை - அமுதத்தின் நேர் வீழ்ச்சி; தாரை - மழையு மாம். மதுரம் கதித்த - இனிமைமிக்க. பைந்தேன் = பசுமை + தேன்; குளிர்ந்த தேன்; இனி, பசுமை - சாரமும் சிறப்புமாம். செப்பும் - (சிறப்பாகச்) சொல்லப்படுகின்ற. முத்தமிழ் - இயல் இசை நாடகம் என்பன. நாற்கவிதை - ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்பன. நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு என்பன. விள் அரிய - வெளியிடுதற்கு முடியாத (சிறப் புடைய). விகற்பம் - வேறுபாடு. தொல் நூல் - பழைய கிரந்தம். உலகத்து இயல்பு - உலகவழக்கு. மிக்க ப்ரபந்தம் - சிறப்பு மிக்க நூல். வண்மை - வளம். 'அலை அடங்கும் கடலை ஒத்து' - அடக்க முடையவனாகி என்க. அதிக சபை - அறிவுடையோர் பலர் கூடிய பெரியசபையில். ஓங்கு அலை - உயர்ந்த அலை. கவிஞன் - செய்யுள் செய்யவல்ல புலவன். கனி வாயன் - கொவ்வைப்பழம்போற் சிவந்த வாயையுடையவன். நேயன் - (அடியார்களிடத்து) அன் புடையவன். (37)

நற்சார்பு

காணரிய பெரியோர்க டரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய் புண்ணியங்
கருணையா யவர்சொன்மொழி கேட்டிட லபிப்பதிரு
காது செய்திடு புண்ணியம்
பேணி யவர்புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில் வாய்செய் புண்ணியம்
பிழையாம லவர்தமைத் தொழுதிடலபிப்பது கை
பெரிது செய்திடு புண்ணியம்

வீணெறிசெலாம லவர்பணிவிடை லபிப்பதுதான்
மேனி செய்திடு புண்ணியம்
விழைவொ டவர்சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்க பூருவ புண்ணியம்
ஆணவமெனுங்களைகளைந் தறிவிளைத்தந்த
வண்ணலே யருமை மதவே
எனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

காண் அரிய - காணுதற்கு அருமையான. தரிசனம் - காட்சி. லபிப்பது - கிடைப்பது. கண் இணை - இருகண். கருணை ஆய் - அருள் பொருந்தி. பேணி - விரும்பி. பிழையாமல் - தவறாமல். பணிவிடை - தொண்டு. மேனி - உடல். வீண் நெறி - பயனில்லாத வழி. விழைவொடு - விருப்பத்தோடு. பூருவம் - முன்னைய. ஆணவம் - செருக்கு. (38)

மறையோர் சிறப்பு

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
யொன்று தப்பாது புரிவா
ருதயாதியிற்சென்று நீர்படிகுவார் கால
மொருமூன்றினுக்கு மறவா
தாராய்ந்து காயத்ரியது ஜபிப்பார் நாளு
மதிதி பூசைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரக்கிரியாலோப
மின்றியே செய்து வருவார்

பேராசை கொண்டிடார் வைதிகநன் மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர்
பெய்யெனப்பெய்யுமுகிலவர்மகிமையெவர்களும்
பேசுதற் கரிதரிது காண்
ஆரார் நெடுஞ்சடில வமலனே யெனையாளு
மண்ணாமலை யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

மறையோர் - வேதம்வல்ல அந்தணர். ஆறு தொழில் - வேதம் ஓதுதல், வேதம் ஓதுவித்தல், யாகம்செய்தல், யாகம் செய்வித்தல், ஈதல், ஏற்றல். சௌச விதி - பரிசுத்தமான ஆசாரமுறைகள். உதய ஆதி - வைகறை, விடியற்காலம். காலம் ஒருமூன்று - காலை, மத்தியான்னம், ஸாயங்காலம். காயத்ரி - ஓர் மந்திரம். அதிதி பூசை - விருந்தினரைப் பேணி உபசரித்தல். மந்திர கிரியா லோபம் - மந்திரமுரைத்தலிலும், மற்றைச் செய்தொழில்முறையிலும் குறை. வைதிகம் நல் மார்க்கம்-வேதம்உரைப்பதற்கு ஏற்ற சிறந்த வழி. முகில் - மேகம். "வேத மோதிய வேதியர்க்கு ஓர்மழை" என்பது காண்க. ஆர் ஆர் - ஆத்திமலர்மாலை பொருந்திய [சூடிய]. நெடு சடிலம் - நீண்ட சடை. சிவபிரான் ஓர் காலத்துத் தவநிலையை உலகத்தவர்க்குத் தெரிவித்தற்குத் தாமே தவஞ்செய்தபோது சடைமுடியையுடையராயினர். (39)

### அரசர் சிறப்பு

மநுநீதி முறைமையும் பராசர் கொண்டாட
வரு மதிக ரணவீரமும்

வாள்விஜயமொடு சரசசாதன விசேஷமும்
வாசி மதகரி யேற்றமும்
கனமா மமைச்சரும் பலமான துர்க்கமுங்
கைகண்ட போர்ப் படைஞருங்
கஜ ரத பதாதியுந் துரக ப்ரவாகமுங்
கால தேசங்க ளெவையும்
இனிதா யறிந்த தானுபதிகளொடு சமர்க்
கிளையாத தள கர்த்தரு
மென்றும்வற்றாத தன தானிய சமுத்திரமு
மேற்றமுள குடி வர்க்கமும்
அனைவோருமெச்ச விங்கிவையெலா முடையபே
ரரசரா மருமை மதவே
ளனுதினமு மதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

பர ராசர் - வேற்றரசர், பகையரசர். ரணம் - போர். வாள் விஜயம் - வாட்போரில் விசேஷமான வெற்றி. சரச சாதன விசேஷம்-(பகையரசர்களை வசப்படுத்துதற்கும் அடக்குதற்கும்அரசர்க்கு வேண்டிய) இனிய உபாயங்களாகிய சாம தான பேத தண்டமென்னும் நால்வகைச்சாதனங்களை முறைப்படி செய்யுந் திறம். வாசி - குதிரை. மத கரி - மத யானை. ஏற்றம் - ஏறுதல், ஆரோஹணம். அமைச்சர் - மந்திரிகள். துர்க்கம்-கோட்டை, மலைமேற்கோட்டை. கைகண்ட - தேறின, சிறந்த. படைஞர் - சேனைவீரர். பதாதி - காலாள். துரக ப்ரவாகம் - குதிரை வெள்ளம். தானுபதிகள் - தூதர். சமர் - யுத்தம். தளகர்த்தர் - படைத்தலைவர். (40)

## வைசியர் சிறப்பு

நீள்கடல் கடந்திடுவர் மலையாளமும் போவர்
நெடிது தூரந் திரிந்து
நினைவு தடுமாறார்கள் சலியார்கள் பொருடேடி
நீணிலத் தரசு புரியும்
வாளுழவரைத் தமது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வராத விடமும்
மனதையு மறிந்துதவி யொன்றுநா றாயிட
வளர்ப்பர் வரு தூலதூலக்கும்
ஆள்விடுவர் மலிவுகுறைவது விசாரித்திடுவ
ரளவில் பற்பல சரக்கு
மமைவுறக் கொள்வர் விற்பார் கணக்கதிலணுவு
மறவிடார் செலவு வரினோ
ஆளியொத்தே மலையினளவுங் கொடுத்திடுவ
ரருள்வைசிய ரருமை மதவே
எனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

மலையாளம் - மலைப்பிரதேசம்; மலையாள மென்னுந் தேயமுமாம். வாள் உழவர் - வாட்படைகொண்டு போராகிய உழவைச் செய்பவர்; அரசர். உதவி - கொடுத்து. ஒன்று நூறாயிட வளர்ப்பர்- (தமது செல்வம்) ஒன்று நூறாகும்படி பெருக்குவார்கள். தூலை தூலக்கும் - நெடுந்தூரத்துக்கும். மலிவு - சரக்கின் மிகுதி; நயம். அமைவுற - தகுதியாக, திட்டமாக. அணு - மிகச்சிறியது. அற -

ஒழிய. ஆளி - சிங்கம், சிங்கத்தினும் வலிய ஓர் விலங்கு; பலபராக்கிரம தைரியங்களையுடையது. (41)

### வேளாளர் சிறப்பு

யசனாதி கருமமுந் தப்பாமல் வேதிய
ரியற்றி நல்லேர் பெறுவதும்
இராச்யபாரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்
டென்று நல்லேர் பெறுவதும்
வசனாதி தப்பாது தனகானியந் தேடி
வசியர் நல்லேர் பெறுவதும்
மற்றுமுள பேரெலா மிடியென்றிடா ததிக
வளமைபெற் றேர் பெறுவதும்
திசைதோறுமுள்ள பல தேவாலயம் பூசை
செய்ய நல்லேர் பெறுவதுஞ்
சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனை வேளாளர்
செய்யு மேழிப் பெருமைகாண்
அசையாது வெள்ளிமலைதனின் மேவி வாழ்கின்ற
வண்ணலே யருமை மதவே
ளழுதிடமுன் மகிதினிலே சதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே.

யசனம் - யாகம். கருமம் - தொழில். வேதியர் - வேதம்வல்ல அந்தணர். இயற்றி - செய்து. ஏர் - அழகு. முடி - கிரீடம். என்றும் - எக்காலத்தும். வசன ஆதி = வசனாதி - சொல் முதலியன. வசியர் - வைசியர். மிடி - தரித்திரம். வளமை - ஐசுவரியம். சீர்-

சிறப்பு. பசுமை + குவளை = பைங்குவளை. பைங்குவளை மாலை புனை - பசுமையாகிய குவளைமலர்மாலையைத் தரித்துள்ள. வேளாளர்க்குக் குவளைமலர்மாலை உரியதாகக் கூறப்படும். மேழி-கலப்பை; கலப்பையின் கைப்பிடி. வெள்ளிமலை யென்பது - கைலாசகிரி. மேவி - பொருந்தி. (42)

### தானாதிபதி மந்திரி சேனாதிபதிகளி னியல்பு

தன்னரசன் வலிமையும் பரராச ரெண்ணமுஞ்
சால மேல்வரு கருமமுந்
தானறிந் ததிபுத்தி யுத்தி யுண்டாயினோன்
றானாதிபதி யாகுவான்
மன்னவர் மனத்தையுங் காலதேசத்தையும்
வாழ்குடி படைத் திறமையும்
மந்திராலோசனையு மெல்லா மறிந்தவன்
வளமான மதி மந்திரி
துன்னிய படைக்குணங் கரிபரிபரீக்ஷையே
சூழ்பகைவர் புரி சூழ்ச்சியுந்
தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
சூரனே சேனாதிபன்
அன்னையினுநல்ல மலைமங்கை பங்காளனே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

பரராசர் - வேற்றரசர், பகையரசர். சால - மிகவும். கருமம்-காரியம், தொழில். அதி புத்தி - மிக்க அறிவு. தானாதிபதி - ஓர்

அரசனுக்குப் பிரதிநிதியாக மற்றோர் அரசனுட்டிற் போயிருந்து இராசகாரியம் முடிப்பவன்; இது தூதனையுங் குறிக்கும். வாழ் குடி - வாழ்கின்ற பிரஜைகள். படை - சைனியம். மந்திராலோசனை - இராஜாங்ககாரியத்தை இரகசியமாக ஆலோசித்தல். வளம் ஆன - சிறப்புள்ள. மதி - புத்தி. துன்னிய படை குணம் - பொருந்திய சேனைகளின் தன்மை. கரி - யானை. பரி - குதிரை. சூழ் பகைவர் புரி சூழ்ச்சி - சூழ்ந்துள்ள சத்துருக்கள் செய்யும் ஆலோசனை; சூழ்ச்சி - தந்திரம், உபாயம் என்னினுமாம். திடம் ஆன சித்தி - பலமான காரியசித்தி; சித்தி - நிறைவேறுதல். மலை மங்கை - பார்வதியை, பங்கு ஆளன் - (திருமேனியில்) இடப் பாகத்தில் உடைய சிவபிரான். (43)

## கோபத்தின் கொடுமை

கோபமே பாவங்களுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்குங்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுற வறுக்குங்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவ னாக்குங்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீநரகு
குழியினிற் றள்ளிவிடுமால்

ஆபத்தெலாந் தவிர்த் தென்னையாட்கொண்டருளு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

துயர் - துக்கம். சீர் - சிறப்பு. கருணை - தயை. ஈனம் - இழிவு. மறலி - யமன். (44)

### பல் துறை

தாம்புரி தவத்தையுங் கொடையையும் புகழுவோர்
தங்களுக் கவை தழைவுறு
சற்றுமறிவில்லாம லந்தணரை நிந்தனைசெய்
தயலிலோ ராயுள் பெருகார்
மேம்படு நறுங்கலவை மாலை தயிர் பாலுறையு
வீடு நற்செந்நெ லிவைகள்
வேறொருவர் தந்திடினு மறுமொழி யறிந்தபேர்
விலைகொடுத்தே கொள்ளுவார்
தேன்கனிகிழங்குவிறகிலை யிவை யனைத்தையுந்
தீண்டரிய நீச ரெனினுஞ்
சீர்பெற வளிப்பரே லிகழாது கைக்கொள்வர்
சீலமுடையோ ரென்பரால்
ஆன்கொடியுயர்த்த வுமைநேசனே யீசனே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

அவை - தவமும், கொடையும். குறைவு உறா - செழிப்படையா; ஓங்கா. நறு கலவை - பரிமளமுள்ள கலவைச்சந்தனம். உறையும் - வசித்தற்கு உரிய. மநு மொழி - மநுதர்மசாஸ்திரத்திற் கூறப்பட்ட முறை. தீண்டு அரிய - தீண்டக்கூடாத. நீசர் - தாழ்ந்தவர். சீலம் - ஒழுக்கம். ஆன் கொடி - வ்ருஷபக்கொடி. (45)

### பகைகொளாத் தகாதவர்

மன்னவ ரமைச்சர் துர்ச்சனர் கோளர் தூதரொடு
மாறாக மர்ம முடையோர்
வலிவர் கருணீகர் மிருபாகஞ்செய் தன்னமிடு
மடையர் மந்திர வாதியர்
சொன்னமுடையோர் புலைய ருபதேசமதுசெய்வோர்
சூழ் வயித்தியர் கவிதைகள்
சொற்றிடும்புலவ ரிவர் பதினைந்து பேரொடுஞ்
சொப்பனந்தனி லாகிலும்
நன்னெறி யறிந்தபேர் பகைசெய்திடார்களிந்
நானிலத் தென்பர் கண்டாய்
நாரியோர்பாகனே வேதாகமம் பரவு
நம்பனே யன்பர் நிதியே
அன்னமூர் பிரமனுங் கண்ணனுங் காணாத
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

அமைச்சர் - மந்திரிகள். துர்ச்சனர் - துஷ்டர். கோளர் - கோள்சொல்லும் கொடியவர். மாறாத மர்மம் - நீங்காத கபடம்.

வலிவர் - பலமுடையவர். கருணீகர் - கணக்கர். பாகம் - சமையல். மடையர் - சமையற்காரர். சொன்னம் - பொன். புலையர் - நீசர். உபதேசமது செய்வோர் - குருக்கள். சூழ் - ஆலோசனைத்திற முள்ள. கவிதைகள் - செய்யுள்கள். சொற்றிடும் - சொல்லும். நல் நெறி - நல்லவழி; சன்மார்க்கம். நானிலம் - பூமி. நாரி ஓர் பாகன் - உமாதேவியை இடப்பாகத்திலுடையவன். நாரி - பெண். வேத ஆகமம் - வேதங்களும் ஆகமங்களும். பரவு - துதிக்கப்பெற்ற. நம்பன் - (அடியவர்களால்) நம்பிச் சரணமடையப்படும் சிவபிரான். அன்னம் ஊர் பிரமன் - அன்னப்பறவையை வாகனமாகக்கொண்டு நடத்துகிற பிரமதேவன். சிவபிரான் ஓர் காலத்திற் பிரமனும் திருமாலாலுங் காணமுடியாத சோதிரூபங் கொண்டாரென்பது, புராணவரலாறு. (46)

இதாகிதஞ்செய்து பயன் கொள்வர்

சுவைசேர் கரும்பை வெண்பாலைப் பருத்தியைச்
சொல்லுநன்னெல்லை யெள்ளைத்
தூயதெங்கின்கனியை யெண்ணுத திட்டரைத்
தொண்டரைத் தொழு தொழும்பை
நவைதீருமாறு கண்டித்தே பயன்கொள்வர்
நற்றமிழ்க் கவிவாணரை
நலமிக்க செழுமலரை யோவிய மெனத்தக்க
நயமுள்ள நாரியர்தமைப்
புவிமீதி லுபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீரரைத் தூயரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்து மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர் கண்டாய்

அவமதிகளிற் றெண்ணியாட் கொண்ட வள்ளலே
யண்ணலே யருமை மதவே
ளநுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

சுவை - இனிய உருசி. சொல்லும் நல் செல்லை - சிறப்பித்துச் சொல்லப்படும் நல்ல செல்வமும். தூய - பரிசுத்தமான. எண்ணுத - மதிக்காத. தொண்டர் - அடியவர். தொழு தொழும்பு - வணங்கித் தொழில்செய்தற்கு உரிய குற்றேவலாளர்; குற்றேவல் செய்வோர். நவை தீரும் ஆறு - குற்றம் நீங்கும்படி. நல் தமிழ் கவி வாணர் - சிறந்த தமிழ்ப்பாடல்செய்து வாழுங் புலவர்கள். ஓவியம் - சித்திரப் பதுமை. நயம் - இனிமைக்குணம், அழகு. நாரியர் - மகளிர். தூயர் - பரிசுத்தரான பெரியோர். போதவும் - மிகவும். பரிவோடு - அன்போடு. இதம் - நன்மை. அவமதி - அவமதிக்கப்படும் தூர்க் குணம்; துர்ப்புத்தியுமாம். ஆள் கொண்ட - அடிமைகொண்ட. வள்ளல் - ஈகைக்குணமுடையவன். அண்ணல் - பெருந்தன்மையுடையவன். கரும்பு முதலியவற்றைக் கண்டித்தும், கவிவாணர் முதலியோர்க்கு இதஞ்செய்தும் அறிவுடையோர் பயன்கொள்வர் என்பது, கருத்து. (47)

## இல்லறம்

தந்தை தாய் சற்குருவை யிட்டதெய்வங்களைச்
சன்மார்க்கமுள மனைவியைத்
தவறாத சுற்றத்தை யேவாத மக்களைத்
தனைநம்பி வருவோர்களைச்

சிந்தை மகிழ்வெய்தவே பணிவிடைசெய்வோர்களைத்
தென்புலத்தோர் வறிஞரைத்
தீதிலா வதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர்தமைச்
சந்ததஞ் செய்கடனை யென்று மிவைபிழையாது
தான்புரிந்திட லில்லறஞ்
சாருநல முடையாராந் தரவறத்தோரு மிவர்
தம்முடன் சரியாயிடார்
அந்தரி யுயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவட்
கன்பனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

தவறாத - பிழைசெய்யாத. சுற்றம் - உறவினர். ஏவாத மக்கள் - 'இதுசெய்' என்று ஏவப்படாமலேயே குறிப்பறிந்துதொழில் செய்யும் புத்திசாலிகளான பிள்ளைகள்; 'ஏவாமக்கள் மூவாமருந்து' என்பது, பெரியோர் அமுதவாக்கு. சிந்தை மகிழ்வு எய்த - மனம் சந்தோஷமடைய. பணிவிடை - ஊழியம். தென்புலத்தோர் - பித்ருதேவதைகள். வறிஞர் - ஏழைகள். தீது இலா அதிதி - குற்றமில்லாத விருந்தினன். துணைவர் - நண்பர், சகோதரர். தேனு - பசு. பூசுரர் - பிராமணர். சந்ததம் செய் கடன் - எப்பொழுதும் செய்யவேண்டிய கடமை. பிழையாது - தவறாமல். புரிந்திடல் - செய்தல். சாரும் நலம் - பொருந்திய நன்மை, சிறப்பு. அந்தரி - உமாதேவி.

(48)

## புகழ்ச்சி

பருகாதவமு தொருவர் பண்ணாத பூஷணம்
பாரின் மறையாத நிதியம்
பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
பண்புடைய பங்கேருகம்
கருகாதபுயல் கலைகளருகாததிங்கள் வெங்
கானினுறையாத சீயங்
கருதரிய விக்குண மனைத்து முண்டானபேர்
காசினியி லருமை யாகும்
தெரியவுரைசெய்யின் மொழிகீர்த்தி வருகல்வியொடு
சீரிதய மீகை வதனந்
திடமானவீர மிவையென் றறிகுவார்களிச்
செகமெலாங் கொண்டாடவே
அருள்கற்பதருவென்ன வோங்கிடுந் தானதுரை
யாகு மெமதருமைமதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

பருகாத - உண்ணாத. பாரில் - பூமியில். நிதியம் - பொருட்குவியல். பரிதி கண்டு அலராத - சூரியனைக்கண்டு மலராத. நிலவு கண்டு உலராத - சந்திரிகையைக்கண்டு வாடாத. பண்பு - குணம். பங்கேருகம் - தாமரை. கருகாத புயல் - கறுக்காத மேகம். கலைகள் அருகாத திங்கள் - கலைகள் குறையாத சந்திரன். வெம் கானில் - கொடிய காட்டில். உறையாத - வசிக்காத. சீயம் - சிங்கம்.

கருது அரிய - நினைத்தற்கு அருமையான. காசினி - பூமி. தெரிய உரை செய் இன் மொழி - கள்ளங்கபடமின்றித் தெளிவாகத் தெரியும்படி பேசும் இனிய சொல். சீர் இதயம் - சிறந்த இருதயம். வதனம் - முகம். செகம் - உலகத்திலுள்ளவர். அருள் கற்ப தரு - (வேண்டியவற்றையெல்லாம்) அளிக்கின்ற கற்பக விருட்சம். ஓங்கிநிற் - உயர்ந்த. தானம் துரை - கொடுக்குமியல்புள்ள பிரபு. பருகாத அமுது - இனியமொழி, ஒருவர் பண்ணாத பூஷணம் - கீர்த்தி, பாரில் மறையாத நிதியம் - கல்வி, பரிதி கண்டு அலராத நிலவு கண்டு உலராத பண்புடைய பங்கேருகம் - சீரிதயம், கருகாத புயல் - ஈகை, கலைகள் அருகாத திங்கள் - வதனம், கானில் உறையாத சீயம் - வீரம் என முறையே காண்க. (49)

## திருமாலவதாரம்

சோமுகாசுரனை முன்வதைத் தமரர் துயர்கெடச்
சுருதி தந்ததும் மச்சமாம்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டி மாநில மெடுத்தே
போமிரணியாக்கதனை யுயிருண்ட தேனமாம்
பொல்லாத கனக னுயிரைப்
போக்கியது நரசிங்க முலகளந் தோங்கியது
புனித வாமன மூர்த்தியாம்
ஏமுறு மிராவணனை வென்றவ னிராகவ
னிரவிகுலம் வேரறுத்தோ
னோர்பரசி ராமன் வருகண்ணனொடு பலராம
னிப்புவி பயந் தவிர்த்தோர்

ஆமினிய கற்கி யினிமேல்வருவ திவைபத்து
மரிவடிவ மருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

அமரர் துயர் - தேவர்களது துக்கம். சுருதி - வேதம். மச்சம்- மத்ஸ்யாவதாரம். சுரர்தமக்கு - தேவர்களுக்கு. ஆமை - கூர்மாவதாரம். மா நிலம் - பெரியபூமி. ஏனம் - பன்றி; வராஹாவதாரம். கனகன் - இரணியாசுரன். நரசிங்கம் - நரசிங்காவதாரம். ஓங்கியது - உயர்ந்து வளர்ந்தது. புனிதம் - பரிசுத்தம். வாமனமூர்த்தி- குள்ளமான திருவுருவமுடையவன்; வாமனாவதாரம். ஏமுறும் - செருக்கும் களிப்புங்கொண்டிருந்த. இராகவன் - இராமாவதாரம்' இரவிகுலம் - சூரியகுலம். ஏர் - அழகு. பரசுராமன் - கோடாலிப் படையையுடைய இராமன்; பரசுராமாவதாரம். புவி - பூமி. கற்கி - கற்கியவதாரம். அரி வடிவம் - திருமாலின் அவதாரங்கள். (50)

### சிவமூர்த்தி

பிறைசூடி யுமைநேசன் விடையூர்தி நடமிடும்
பெரிய னுயர்வதுவை வடிவன்
பிச்சாடனன் காமதகனன் மறலியைவென்ற
பெம்மான் புரந்தகித்தோன்
மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வெளவினோன் வீரேசுரன்
மருவுநரசிங்கத்தை வென்றவர னுமைபாகன்
வனசரன் கங்காளனே

விறன்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்கசக்கர முதவினோன்
விநாயகற் கருள்செய்தோன் குகனுமையுடன்கூடி
மிளிரேகபாதன் சுகன்
அறிவரிய தக்ஷிணாமூர்த்தியொ டிலிங்கமா
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினைதரு சதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

பிறை சூடி - பிறைச்சந்திரனை முடியில் அணிந்தவன். விடை ஊர்தி - இடபவாகனமுடையவன். நடம் இடும் - நர்த்தனஞ்செய்யும். வதுவை வடிவன் - மணக்கோலமுடையவன். பிக்ஷாடனன் - பிச்சைகாகச் சஞ்சரித்தவன். காம தகனன் - மன்மதனை யெரித்தவன். மறலியை வென்ற பெம்மான் - யமனைச் சயித்த பெருமான். புரம் தகித்தோன் - முப்புரங்களை யெரித்தவன். மறம் மலி - அதர்மமும் வீரமும் மிகுந்த. மருவு - (வலிமை) பொருந்திய. வனசரன் - வேடக்கோலந் தரித்தவன். கங்காளன் - கங்காளத்தைத் தரித்தவன்; கங்காளம் - தசைகழிந்த உடல்முழுவெலும்பு. விறல் மேவு - வெற்றிபொருந்திய; இனி, விறல் - பெருமையுமாம். கடுமாந்தி - விஷமுண்டவன். குகன் - சுப்பிரமணியக்கடவுள். மிளிர்-விளங்குகின்ற. ஏகபாதன் என்பது, சிவபிரானுக்கு ஓர் பெயர். சுகன் - இன்பவுருவமாயிருப்பவன். (51)

திருவானைக்கா

# அகிலாண்டவம்மை

## பிள்ளைத்தமிழ்

[illegible]

இஃது

12529

திரிசிரபுரம்-மகாவித்துவான் (4081)

**மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்**

பாடியது.

அஷ்டாவதானம்

**பூவை-கலியாணசுந்தரமுதலியார்**

அவர்களால்,

பரிசோதிக்கப்பட்டு,

திரிசிரபுரம்

தி-சபாபதிபிள்ளையவர்களால்

தமது

வார்குழலாம்பாளச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

நந்தன௵ கன்னிரவி.